கல்கி



KI ஜூன் 10, 1943 4 அண

கல்கி
பொருளடக்கம்

மலர் 2 } இதழ் 32 }

1943 ஜூன் 10

{ சுபானு௵ { வைகாசீ 27உ.

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.



★

"இந்தியப் புராதனக் கலைகளை வளர்ப்பதற்காகவே உயிரை வைத்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொல்லுகிறவர்கள் பலர் இந்தக் காலத்தில் இருக்கிறார்கள். அதே நோக்கம் கொண்ட ஸ்தாபனங்களும் பல இருக்கின்றன. அத்தகைய சிறந்த ஸ்தாபனங்களில் ஒன்று திருவல்லிக்கேணி சரஸ்வதி கான நிலையம். ஸ்ரீமதி லலிதாவினால் நடத்தப்படும் இந்த நிலையத்தில் கானக் கலையுடன் நாட்டியக் கலையும் வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த நிலையத்தின் மாணவிகள் "கீத கோவிந்த"ப் பாடல்களுக்கு இசைந்த நாட்டியமும் அபிநயமும் கற்பிக்கப்பட்டிருப்பது ஒரு விசேஷமாகும். இந்த மாணவிகளுக்குள் நடனக் கலையில் திலகமாக விளங்கும் கே. ரங்கநாயகி என்னும் சிறுமியின் ஒரு நாட்டியத் தோற்றத்தை இந்த இதழ் மேலட்டையில் காணலாம்.

★

★ ஜுபிடர் தயாரிப்பு ★

ஜூன் மாதம் 14-ந் தேதி முதல் தமிழ் நாட்டின் எல்லா முக்கிய நகரங்களிலும், 19-ந் தேதி முதல் சென்னை பாரகனிலும் திரையேறுகிறது



குபேர குசேலா

டைரக்ஷன். R.S. மணி - B.S. ராமையா

JUPITER PICTURES

சின்னப்பா - ராஜகுமாரி

சிவன் - கோவிந்தன் - கிருஷ்ணன் - மதுரம்

ஸ்டூடியோ - நியூடோன்

★

சென்னை நகர உரிமையாளர்:

தி சந்திரா டாக்கீஸ் லிமிடெட், மதராஸ்

ஸௌத் இந்தியா பிக்சர்ஸ் ரிலீஸ்

"குபேர குசேலா" பாட்டுக்களை "கொலம்பியா" ரிகார்டுகளில் கேளுங்கள்.

கல்கி

மலர் 2 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 32

என்ன சேதி?

சென்னைக்கு வாழ்த்து ●

சென்ற வாரம், சென்னையில் நடைபெற்ற இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேக்ஷகர் ஸ்ரீ ரங்கய்ய நாயுடு வெற்றி பெற்றார். வெற்றியென்றால் அற்ப சொற்பமான வெற்றி அல்ல. போட்டியாக நின்ற ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகருக்குக் கிடைத்ததைப் போல் மூன்று பங்கு வோட்டுகள் அவருக்குக் கிடைத்தன.

அவர் இப்படி மகத்தான வெற்றி அடையச் செய்ததற்காக முதன் முதலாகச் சென்னை நகர சர்க்கார் அதிகாரிகளுக்கு வாழ்த்துக் கூறுகிறோம். ஏனென்றால் அவர்கள் ஸ்ரீ ரங்கய்ய நாயுடுவுக்குத் தேர்தல்



சம்பந்தமாக என்னென்ன இடைஞ்சல்கள் செய்ய முடியுமோ அத்தனையும் செய்தார்கள். அவரை ஆதரித்துப் பொதுக் கூட்டங்கள் போடுவதைத் தடுத்தார்கள்; ஊர்வலங்கள் செல்வதைத் தடை செய்தார்கள். அதிகப்படியான பெட்ரோல் சப்ளை செய்ய மறுத்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர் விஷயத்தில் இந்தத் தடைகள் ஒன்றும் கிடையாது. இதெல்லாம் வோட் கொடுப்பதில் அசிரத்தையா யிருந்தவர்களை [illegible] கிளப்பி விட்டதென்பதில் ஸந்தேகம்? ஆகவே, ஸ்ரீ நாயுடு பரிமிதமான வெற்றிக்கு அதிகாரிகளை முதன் முதலாக வாழ்த்த வேண்டியது நியாயமேயல்லவா? இரண்டாவதாக, சென்னை வோட்டர்கள் வழக்கம்போல் இந்திய சட்டசபை ஸ்தானத்துக்குக் காங்கிரஸ்காரரையே தேர்ந்தெடுத்தனுப்பியதற்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

சமரஸம் ●

சில மாதங்களுக்குமுன் கஸபிளாங்காவில் நடந்த யுத்த மகாநாடு சம்பந்தமாக ஒரு போட்டோ படம் பத்திரிகைகளில் வெளியானது ([illegible] ஞாபகமிருக்கலாம். அதில் [illegible] டின் பக்கத்தில் ஜெனரல் [illegible] சர்ச்சிலின் பக்கத்தில் ஜென[illegible] டிகாலும் உட்கார்ந்திருந்தார்கள். அதைப் பார்த்தபோது இந்த இரண்டு பிரெஞ்சு தலைவர்களும் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளாதிருப்பதற்காகவே அப்படி உட்கார வைத்திருந்தார்களோ என்று தோன்றியது.

இந்த கஸபிளாங்கா மகாநாட்டிற்குப் பிறகு இந்தத் தலைவர்களிடையே சமரஸம் ஏற்படுத்த எத்தனையோ முயற்சிகள் செய்யப்பட்டு வந்தன. ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. இந்தத் தலைவர்கள் இருவரும் யார் யாரை, எந்த இடத்தில், எப்பொழுது, எந்தமாதிரி சந்திப்பது என்ற விஷயமாக நமது மடாதிபதிகள் சிலரைப் போல் சச்சரவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாக இப்பொழுது இவர்களிடையே சமரசம ஏற்பட்டு விட்டது. முதலில் மிகவும் விட்டுக் கொடுக்காதிருந்த ஜெனரல் கிராட் இப்பொழுது டிகாலின் இஷ்டப்படி யெல்லாம் நடக்கச் சம்மதித்திருக்கிறார். இனிமேல் இந்த இரண்டு தலைவர்களும் வட ஆபிரிகாவைப் பிரெஞ்சு தளமாகக் கொண்டு தங்கள் தாய் நாடான பிரான்ஸைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபடப் போகிறார்கள். அதாவது, இவர்கள் முதலில் எந்தத் தேசத்தினரின் சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டார்களோ, அந்தத் தேசத்தில் தங்கி, அதை மேலும் அடிமைப் படுத்திக் கொண்டு தங்கள் தாய் நாட்டின் சுதந்திரத்துக்காகப் போர் புரியப் போகிறார்கள்.

பகற் கனவுகள்


தாம் சிவாஜி ஸ்தானத்தில் இருப்பதாக சாவர்க்கர் சொப்பனம் காண்கிறார்.
தாம் மொகலாய சக்கரவர்த்தியின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதாக ஜின்னா கனவு காண்கிறார்.
ஏழை இந்தியன் தினம் ஒரு தடவையாவது வயிறார உணவு உண்பதாகக் கனவு காண்கிறான்.
வைஸ்ராய் டெல்லியிலிருந்து தப்பிக்கொண்டு ஓடுவதுபோல் கனவு கண்டு கொண்டிருக்கிறார்.

- உம்மன்


பண்டித நேரு சர்வதேசத்தலைவர்களுடன்
பேசிச் சர்வதேச சிக்கல்களைத் தீர்த்துக்
கொண்டிருப்பதாகக் கனவு காண்கிறார்.
சமாதானம், சமாதானம்
என்று உலகம் கனவு
கண்டு கொண்டிருக்கிறது.
யுத்தம் முடிந்த
பிறகு பிரிட்டிஷ்
காரர்கள் உலகப்
போலீஸாராக
இருக்கவேண்டு
மென்பது
சர்ச்சில்
துரையின்
கனவு.
காந்திமகானோ உலகில் சாந்தி
நிறைந்த அஹிம்சா யுகம்
தோன்றவேண்டு மென்று
கனவு காண்கிறார்.

சுழுத்தே சுகமாயிரு!

படிப்பு இல்லாதவர்களும், நாகரிகம் இல்லாதவர்களும், சுதந்திரம் இல்லாதவர்களும், சூது வாது அறியாதவர்களுமான இந்தியா தேசத்தின் நாற்பது கோடி ஏழை மக்களை ஆட்சி புரிந்து சம்ரட்சணை செய்யும் பெரிய பொறுப்பை இங்கிலாந்தின் பார்லிமெண்ட் சபையானது தாங்க முடியாமல் தாங்கிக்கொண்டு, தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு, திண்டாடித் திணறிக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்த விஷயமே. "பரோபகாரம் இதம் சரீரம்" என்னும் கொள்கையைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் அப்பேர்ப்பட்ட காமன்ஸ் சபையில் ஒரு அங்கத்தினருக்குத் திடீரென்று ஒரு நாள் இந்தியா தேசத்தில் ஜனங்கள் உண்ண உணவுக்கும் உடுக்கத் துணிக்கும் கஷ்டப்படுகிற விஷயமானது ஞாபகத்துக்கு வந்தது. "ஐயையோ! இந்தியாவில் அகவிலையெல்லாம் ஏறி விட்டதாமே? அரிசி அசாத்திய கிராக்கியாமே? கோதுமை குதிரைக் கொம்பாகி விட்டதாமே? துணி மணிகளின் விலை கேட்பதற்கே கர்ண கடூரமாகி விட்டதாமே? ஆகா! அந்த நாற்பது கோடி ஏழை மக்களும் என்னவெல்லாம் கஷ்டப்படுகிறார்களோ?" என்று அவர் துக்கப்பட்டு, அந்த துக்கத்தினால் இளைத்த தேகத்தை வெறும் ரொட்டியும், வெண்ணெயும், உருளைக் கிழங்கும் மட்டும் சாப்பிட்டுத் திடப்படுத்திக் கொண்டு, காமன்ஸ் சபைக்குக் கிளம்பினார்! — அன்று இந்திய மக்களின் துயரங்களைச் சபையிலே பிய்த்து வாங்கி விடுவது என்ற நோக்கத்துடனேதான்!

அந்த நோக்கத்தை அவர் நிறைவேற்றாமலும் விடவில்லை. சபையில் பளிச்சென்று எழுந்து நின்று, இந்தியா மந்திரி அமெரியைப் பார்த்துக் கேட்டார் ஒரு கேள்வி :—

"இந்தியாவிலே அகவிலை ரொம்ப ரொம்ப ஏறி விட்டதாமே? விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ஏதாவது எப்போதாவது செய்கிறதாக சர்வ வல்லமை பொருந்திய இந்திய சர்க்காருக்குத் திருவுளம் உண்டா?"

இப்படிக் காரசாரமாகவும், கன்னத்தில் அறைந்தது போலவும் அந்த அங்கத்தினர் கேட்க, — இந்தியா மந்திரி கர்னல் அமெரியானவர் பதில் சொல்கிறார் :—

"ஆகா! இந்தியாவிலே விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில் நாங்கள் தூங்கி விடவில்லை. எத்தனையோ பிரமாதமான காரியங்களைச் செய்து கொண்டுதானிருக்கிறோம். ஆனால், இந்தியாவிலே விலைவாசிக் கட்டுப்பாடு செய்வது அவ்வளவு சுலபமான விஷயம் அல்ல; ரொம்பவும் கஷ்டமான வேலை!"

மேற்கண்ட கர்னல் அமெரியின் கூற்றை நாம் மனமார, வாயார, கையார ஆமோதிக்கிறோம். ஆமாம்; இந்தியாவிலே விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது கஷ்டமான காரியந்தான். அதிகாரவர்க்க ஆட்சியிலே அது ரொம்ப ரொம்பக் கஷ்டமானது. அன்னிய ஆட்சியிலே எந்த நல்ல காரியம் செய்வதும் கஷ்டமானதுதான். ஏன்? அன்னிய ஆட்சியே ஒரு பெரிய கஷ்டந்தான், போங்கள்!

* * *

காவேரியும், கங்கையும் பாயும் இந்தியாவிலே, "பைந்நிறப் பழனம் பரவிய" இந்தப் பாரத நாட்டிலே, வைகாசி மாதத்தில் மழை கொட்டு கொட்டென்று கொட்டி ரயில் பாதைகளைப் பெயர்க்கும் இந்தப் புண்ணிய பூமியிலே, இப்போது உணவுக்கும், உடைக்கும் கிராக்கி வந்திருக்கிறது. கிராக்கி என்றால் இப்படி, அப்படி அல்ல; விலை கிராக்கி மட்டுங் கூட அல்ல. அரிசியே கிடைக்காத கிராக்கி! துணியே அகப்படாத கிராக்கி! அரிசியும் துணியும் வாங்க அடிதடி சண்டைபோட வேண்டியதாயிருக்கும் கிராக்கி!

இத்தனைக்கும் இந்தியாவிலே நாம் பெருந்திண்டிக்காரர்கள் அல்ல; தினம் ஐந்து வேளை சாப்பிடுகிறவர்கள் அல்ல. பெரும்பாலும் பத்திய உணவு சாப்பிடுகிறவர்கள்; அரை வயிறு சாப்பிடுகிறவர்கள்; அரிசியைக் கஞ்சியாக்கிக் குடித்துக் காலந் தள்ளுகிறவர்கள். இரண்டு வேளைச் சாப்பாடே நமக்கு யதேஷ்டம். இப்பேர்ப்பட்ட நமது எளிய வாழ்க்கைதான், "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்த நாழி அரிசிக்குத்தான் இப்போது பஞ்சம்!

அந்த நான்கு முழ வேஷ்டிக்குத்தான் இப்போது கிராக்கி!

"மெட்ராஸ் மெயில்" என்னும் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை இருக்கிறதே, அது நமது ஜனங்களின் உணவுப் பஞ்சத்தைப் போக்கி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. எந்தத் தேதி "மெயில்" பத்திரிகையை எடுத்துப் பிரித்தாலும் சரி:

"சென்னையிலே அரிசிக்கடை வாசலிலே ஆயிரம் பேர் நிற்கிறார்கள்!"

"பாலக்காடிலே ஜனங்கள் கையில் கூடையுடன் அரிசி வாங்கக் கடை கடையாய்ப் போகிறார்கள்."

"திருநெல்வேலியில் கடைக்காரர்கள் தலைக்கு அரைப்படி அரிசிக்கு மேல் கொடுக்க மறுக்கிறார்கள்!"

"கோயமுத்தூரில் அரிசிக் கடைக்காரர்கள் அடியோடு கையை விரித்து விட்டார்கள்!"

என்ற இப்படிப்பட்ட செய்திகளை ஏராளமாய்ப் பார்க்கலாம்.

துணியின் விஷயமோ சொல்ல வேண்டியதில்லை. ஒன்றுக்கு ஐந்து மடங்காகத் துணி விலை உயர்ந்திருக்கிறது. ஐந்து ரூபாய்க்கு விற்ற நூல் புடவை இப்போது இருபத்தைந்து ரூபாய் விற்கிறது!

ஏற்கனவேயே இந்த ஏழை நாட்டில் லட்சக் கணக்கான ஏழை ஸ்திரீகள் போதிய உடை வாங்குவதற்குக் கதியில்லாமல் இருந்தார்கள். இப்போது சொல்லவா வேண்டும்?

இந்த விநோத நிலைமை — இந்தப் பரிதாப நிலைமை — இந்த நம்பத் தகாத கோர நிலைமை — ஏன் ஏற்பட்டது? எதனால் ஏற்பட்டது?

உணவுப் பஞ்சத்துக்குக் காரணம் சொல்கிறார்கள்: "உணவுப் பொருள்களை ஜனங்கள் சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள்; அதனால்தான்!" என்று.

என்ன வேடிக்கையான காரணம்? உணவுப் பொருள்கள் எத்தனை காலம் கெடாமல் இருக்கும்? நெல்லை ஒரு வருஷத்துக்கு மேல் வைத்திருக்க முடியாது. ஆகவே, சேர்த்து வைப்பவர்கள் ஒரு வருஷத்துக்கு மேல் வைக்க முடியாது. அப்படிச் சேர்த்து வைக்கக் கூடியவர்களும் நாட்டிலே வெகு சிலர் தான். அவர்கள் நூற்றுக்கு ஒருவருக்கு மேல் இருக்க முடியாது. அப்படிச் சேர்த்து வைக்கும் நூற்றுக்கு ஒருவர் மூன்று வருஷத்துக்கு முன்னும் சேர்த்து வைத்துக்கொண்டு தானிருந்தார்கள். அப்போதெல்லாம் ஏன் உணவுப் பஞ்சம் ஏற்படவில்லை? — இப்போது மட்டும் ஏன் ஏற்படுகிறது?

இதற்குப் பதிலாக, "ஓஹோ! யுத்தம் என்பதாக ஒன்று நடக்கிறதென்று தெரியாது போலிருக்கிறது!" என்று நம்மைக் கேட்கக் கூடும்.

ஆகா! யுத்தம் நடப்பது நமக்குத் தெரிந்து தானிருக்கிறது. ஆனால், இப்போதுதானா நடக்கிறது? மூன்று வருஷமாக நடக்கவில்லையா? நம் தேசத்திற்கு மட்டுந்தானா? இங்கிலாந்து முதலிய மேனாடுகளுக்கு நம்மை விட யுத்தம் அதிக நெருக்கமாக நடக்கவில்லையா? அங்கேயெல்லாம் இப்படிப்பட்ட உணவு — உடை நெருக்கடி ஏன் ஏற்படவில்லை?

ஏனென்றால், அங்கேயெல்லாம் யுத்தம் ஆரம்பித்த வுடனேயே தீர்க்காலோசனையுடன் உணவு — உடைத் திட்டங்கள் போட்டு விட்டார்கள். தேசத்தில் இவ்வளவு ஜனங்கள் இருக்கிறார்கள்—குறைந்த பட்சம் இவ்வளவு உணவும் உடையும் வருஷத்துக்கு வேண்டும் — கையிருப்பில் இவ்வளவு இருக்கிறது—உள் நாட்டில் இவ்வளவு விளையும்—வெளிநாட்டிலிருந்து இவ்வளவு இறக்குமதியாகவேண்டும்—என்றெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டார்கள். அதற்குத் தகுந்தாற்போல் கையிருப்பிலுள்ள உணவு—உடைகளை விறைக்காமல் — ஒருவருக்கு அதிகமாகவும் ஒருவருக்குக் குறைவாகவும் கொடுக்காமல்—எல்லாருக்கும் நிரந்து கொடுக்க ஏற்பாடு செய்தார்கள்.

நம் நாட்டிலோ அம்மாதிரி தீர்க்காலோசனையுடன் தேசம் முழுவதற்கும் பொதுவான திட்டம் போடப்படவில்லை. கஷ்டம் வருவதற்கு முன்னால், அது வராமல் தடுக்க எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை. கஷ்டம் வந்த பிறகு. அதைத் தடுப்பதற்குக் காரியம் தொடங்குகிறார்கள்! அதனாலேயே கஷ்டம் இன்னும் அதிகமாகிறது! ஒரு பக்கத்தில் கஷ்டத்தை விரட்டினால், அது இன்னொரு பக்கத்தில் போய்த் தலையை நீட்டுகிறது. எனவே, "இந்தியாவில் விலைவாசிகளைக் கட்டுப் படுத்துதல் கஷ்டம்" என்று சொல்லிக் கர்னல் அமெரியும் கஷ்டப்படுகிறார். கஷ்டம்! கஷ்டம்!

காலதாமதமாய்த்தான் ஒரு காரியத்தை ஆரம்பித்தார்களே, அதைத் தீர்க்க யோசனையுடன் சரியான முறையில் ஆரம்பித்துச் சரியாக நடத்துகிறார்களா? — கிடையாது. நினைத்தபோது நினைத்த இடத்தில் ஏதாவது ஒரு கட்டுப்பாட்டை ஆரம்பித்து வைக்கிறார்கள்! அது வெறும் முட்டாள்தனமாய் முடிகிறது! நுனி மரத்திலிருந்து அடி மரத்தை வெட்டும் அசட்டுத்தனமாகிறது!

உதாரணமாக, உணவுப் பொருள் கட்டுப்பாடு செய்யும் லட்சணத்தை—அவலட்சணத்தை—பார்க்கலாம். உணவுப் பொருள்கள் நம் தேசத்திலிருந்து வெளியே போகக்கூடாதென்று கட்டுப்படுத்துவது நியாயம். ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்குப் போவதைத் தடுப்பதும் அவசியமாகலாம். ஆனால் ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவுக்கு அரிசி போவதைத் தடுப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவுக்கு அரிசி என்னத்திற்காகப் போக வேண்டும்? முதல் ஜில்லாவில் அரிசி தேவைக்கதிகமாகவும், இரண்டாவது ஜில்லாவில் குறைவாகவும் இருந்தால்தான் போகும். இதைப் போய்க் கட்டுப்பாடு செய்வதில் ஏதாவது அர்த்தம் உண்டா?

ஆமாம்; ஒரு ஜில்லாவில் அதிகமாகியிருக்கும் நெல்லையெல்லாம் சர்க்கார் குறைந்த விலைக்கு வாங்கி ஈரானுக்கோ, ஈராக்குக்கோ அனுப்புவதாயிருந்தால் தான் அதற்கு அர்த்தம் உண்டு. இல்லாவிட்டால் இல்லை!

மேற்படி ஜில்லா கட்டுப்பாட்டினால் மிராசுதார்களும், ஏழைக் குடியானவர்களும் தங்களுடைய தானியங்களுக்குச் சரியான விலைபெற முடியாமல் போகிறது. இது விபரீதமான பலனை அளிக்கும். ஏனென்றால், விவசாயம் என்பது மந்திரத்தினால் செய்வதல்ல. அதற்குச் சில சாதனங்கள் வேண்டும். உதாரணமாக, மாடுகளுக்குப் பருத்திக் கொட்டை அவசியம். பருத்திக் கொட்டை ஐந்தணாவுக்கு விற்றது ஒன்றரை ரூபாய்க்கு விற்கும்போது நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கா விட்டால்—நெல்லை விற்பதற்கே முடியா விட்டால்—விவசாயிகள் என்ன செய்ய முடியும்? இது மாதிரியே விவசாயத்துக்கும், விவசாயிகள் உயிர் வாழ்வதற்கும் வேண்டிய எல்லாப் பொருள்களும் விலை அசாத்தியமாய் உயர்ந்து விட்டன. இதையெல்லாம் கட்டுப்படுத்தாமல் நெல் விலையை மட்டும் கட்டுப்படுத்தினால் என்ன பிரயோஜனம்? ஏன்? விவசாயம் தடைப்பட்டு இப்போது விளைகிற நெல்லும் விளையாமற் போகும்; — இதுதான் பிரயோஜனம்!

* * *

உணவுக் கட்டுப்பாட்டை இவ்வளவு அழகாக நடத்துகிற அதிகார வர்க்கத்தார் துணி விலை விஷயத்தில் இவ்வளவு காலமும் தூங்கியது பரம ஆச்சரியமான ஒரு மர்மம் என்றே சொல்ல வேண்டும்.

எல்லாவற்றிற்கும் முதலாக விலை கட்டுப்படுத்த வேண்டிய — கட்டுப்படுத்தக்கூடிய—ஒரு பொருள் உண்டென்றால், அது துணிமணியேயாகும்.

ஏனெனில், மற்றப் பொருள்கள் எல்லாம் கிராக்கியானதற்கு ஏதாவது நியாயமான காரணங்கள் இருக்கலாம்; துணி விலை ஏறியதற்கு அத்தகைய காரணமே கிடையாது.

மில் முதலாளிகளின் கொள்ளை லாப ஆசையைத் தவிர வேறு காரணம் கிடையாது.

பம்பாய் மில் முதலாளிகள் ஏறக்குறைய நூறு கோடி ரூபாய் அமிதலாப வரி கொடுக்கப் போகிறார்கள்.

கோயமுத்தூர் மில் முதலாளிகள் இரண்டு கோடி ரூபாய் அமிதலாப வரி கொடுக்கப் போகிறார்கள்.

கணக்கற்ற ஏழைகளிடமிருந்து கொள்ளை லாபம் அடித்து சர்க்காருக்கு அமித வரியாகக் கொடுப்பதில் மில் முதலாளிகள் என்ன பயன் அடைகிறார்கள் என்று கேட்கலாம். அதுதான் முதலாளித்வத்தின் மர்மம்! நம்மாலெல்லாம் அறிய முடியாதது.

இப்படியாக அகாரணமாய் அசாத்தியமாய்த் துணியின் விலை விஷம்போல் ஏறி வந்தும் சர்க்கார் தூங்கிக் கொண்டேயிருந்தார்கள். சமீபத்தில் தான் அவர்கள் கும்பகர்ணப் படலத்திலிருந்து எழுந்து ''அடாடா, ஏழைகள் துணி கிராக்கியால் கஷ்டப்படுகிறார்களா?'' என்று கேட்டார்கள்.

அப்படிக் கேட்டுவிட்டு, ''ஓ எங்கள் அன்பார்ந்த மில் முதலாளிகளே! வாருங்கள்! ஏழைகளின் துயரத்துக்கு மனமிரங்கித் துணி விலையைக் குறைக்க ஒரு திட்டம் போடுவோம்'' என்றார்கள்.

மல் முதலாளிகள், "ஐயோ! ஏழைகளின் கண்ணீர் எங்கள் இருதயத்தைப் பிளக்கிறதே! உடனே திட்டம் போடலாம்" என்றார்கள்.

அந்தப்படியே மில் முதலாளிகளும் இந்திய சர்க்கார் பிரதிநிதியான மிஸ்டர் ஹைதரி என்பவரும் கூடிக் கலந்து ஆலோசித்துத் துணி விலை குறைக்கும் திட்டம் ஒன்று போட்டிருக்கிறார்கள்.

அந்த திட்டத்தைப் பற்றி சர்க்காரின் பிரதிநிதி, "இது லேசான திட்டமல்ல; பிரமிக்கக்கூடிய பிசமாதமான திட்டம். இதன் பிரகாரம் அநேகமாக இன்னும் ஆறு மாதத்தில் துணிமணிகளின் விலை கொஞ்சம் குறைந்தாலும் குறைந்து விடலாம்!" என்று திருவாய் மலர்ந்திருக்கிறார்.

என்னமாய் இருக்கிறது கதை! ஆறு மாதத்தில் விலை குறைந்தாலும் குறையலாமாம்! "மேலைக்கு வாழ்க்கைப் படுகிறேன். கழுதே! சுகமாயிரு!" என்ற கதையா, இல்லையா? இதற்கு ஒரு திட்டம் வேறு கேடு!

சர்க்கார் மனது வைத்தால் ஒரே நாளில் துணி விலை குறைந்து விடும்படி செய்யக் கூடாதா? அதற்கு மனம் இல்லையா? அல்லது கையினுல்தான் ஆகவில்லையா?

* * *

விலை வாசிகள் குறைய வேண்டுமானால், ஏழைகளின் கஷ்டங்கள் உண்மையிலே நீங்க வேண்டுமானால், அதற்கு சர்க்கார் கட்டுப்பாடு திட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய முறையே வேறு. முதலில் பின் வரும் இரண்டு கட்டுப்பாடுகளைச் செய்ய வேண்டும்:—

(1) சர்க்கார் பொக்கிஷ இலாகா காகித நோட்டுக்களை இஷ்டம்போல் அச்சிட்டுக் கொண்டு போவதைக் கட்டுப்படுத்த வேண்டும். (அபரிமிதமாக சர்க்கார் நோட்டுக்கள் வெளியாவதுதான் விலைவாசி ஏற்றத்துக்கு முக்கிய காரணமாகும்.)

(2) இந்தியாவின் தேவைகள் பூர்த்தியாகாத வரைக்கும் வெளிநாடுகளுக்கு உணவோ, துணியோ ஏற்றுமதி செய்வதைக் கண்டிப்பாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

இந்த இரண்டையும் செய்த பிறகு தேச நலத்தில் அக்கரை கொண்ட சிறந்த பொருளாதார நிபுணர்களைக் கூட்டி ஆலோசித்து, தேச முழுவதற்கும் பொதுவாகவும் எல்லாப் பொருள்களுக்கும் பொருந்தும் படியும் விலைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

தானியங்களின் விலை குறைய வேண்டியதுதான்; அதே சமயத்தில் துணிமணிகள் முதலிய மற்ற எல்லா சாமான்களின் விலையும் குறைய வேண்டும். ஏழை விவசாயிகளின் தலையில் மட்டும் கை வைப்பதில் பிரயோஜனமில்லை. விபரீத பலன்தான் ஏற்படும்.

இதையெல்லாம் செய்வதற்குத் தீர்க்கமான புத்தியும், செயல் திறமையும் வேண்டும். அதிகார வர்க்க சர்க்காருக்கு இந்த புத்தியோ, திறமையோ இல்லையென்றால், மற்றவர்களுக்கு இடங் கொடுத்து விலகிக் கொண்டாவது தொலையலாமல்லவா? படுகிற கஷ்டத்தைத் தேசத் தலைவர்களின் ஆட்சியிலேதான் ஜனங்கள் பட்டு விட்டுப் போகட்டுமே!

அக்குப் போர்

"காசி"

● "ஸ்ரீ சந்திரராவ் நாயுடு தேர்தலில் தோற்றுப் போய் விட்டார். நல்ல மனிதர் பாவம்!" என்று ஒருவர் அங்கலாய்க்கிறார். ஆனால் அவருடைய நல்ல காலந்தான் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும் சிலர் கூறுகிறார்கள். ஏனென்றால், சென்னை நகரத்தில் இந்திய சட்ட சபைக்கு நின்று தோல்வியடைந்தவர் என்ற ஹோதாவில் அவர் வைஸ்ராய் நிர்வாக சபை அங்கத்தினராகவோ, லண்டனில் இந்தியா மந்திரி கௌன்சில் அங்கத்தினராகவோ அல்லது பஸிபிக் யுத்த ரங்கக் கௌன்ஸில் அங்கத்தினராகவோ போவதற்கு 'சான்ஸ் இருக்கிறதல்லவா?" அதுதானே சம்பிரதாயம்?

★

ஆர். ஏ. எப். விமானங்கள் பாரீஸ் நகரத்தின்மீது குண்டுகளை வீசியபோது, நகர வாசிகள் சந்தோஷத்தால் ஆரவாரஞ் செய்தார்களாம்.

அப்படியானால் அந்தக் குண்டுகள் 'கோவாமல்' வெடித்திருக்க வேண்டும்.

★

போன வாரம் "'பாலைவன ஜயம்' என்ற ஒரு ஸினிமா படம் சென்னையில் காண்பிக்கப்பட்டது. இதில் முழுக்க முழுக்க பிரிட்டிஷ்காரர்களும், ஆஸ்திரேலியர்களும், கனடாக்காரர்களும் வீரமாகச் சண்டை போடுவது காண்பிக்கப் பட்டிருக்கிறது. எதோ ஓரிடத்தில் சீக்கியச் சிப்பாய்கள் ஒரு கப்பலில் தங்கள் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு ஏறுகிறார்கள். இன்னொரு இடத்தில் என்னமோ ரொட்டி மாதிரி கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியர்கள் சண்டை செய்தது இவ்வளவுதானா? ஏன் இந்தியர்களை அதிகம் காண்பிக்கவில்லை?" என்று ஒருவர் கேட்கிறார்.

இந்தியர்கள் படம் பிடித்துக்கொள்ள சங்கோஜப்பட்டிருக்கலாம். அல்லது அவர்கள் யுத்த முனையில் படம் எடுக்க வசதியில்லாத நிலைமையில் ஓய்வின்றி அகோரப் போர் புரிந்து கொண்டிருக்கலாமல்லவா?

★

ஜப்பான் தேசத்தை விமானங்களால் தாக்குவதற்கு ரஷ்யா ஸைபீரியாவில் சில தளங்களை நேச தேசத்தினரின் உபயோகத்துக்காக விட வேண்டும் என்று அமெரிக்காவில் சிலர் கிளர்ச்சி செய்கிறார்கள்.

ஸ்டாலின் தளங்களைக் கொடுக்க மாட்டேனென்று சொல்லி விட்டால் பிறகு "இரண்டாம் முனை, ஏற்படுத்துங்கள்" என்று அவர் திருப்பிக் கேட்க முடியாதல்லவா?

★

ஆனால் இரண்டாம் முனை சமீபத்தில் ஏற்பட்டே விடும்போலிருக்கிறது. அதுவும் ராய்ட்டர் அனுப்பும் செய்திகளைப் பார்த்தால் நேச தேசத்தினர் "நாங்கள் ஐரோப்பாவில் இத்தனாம் தேதி, இன்ன இடத்தில் இறங்கிச் சண்டை செய்யப் போகிறோம். எங்களை எதிர்பார்த்துத் தயாராயிருங்கள்" என்று நோட்டீஸ் கொடுத்து விட்டு, தம்பட்டம் போட்டுக்கொண்டு போவார்கள் போலிருக்கிறது.

★

ஒரு பத்திரிகாசிரியர் தமது பாக்கெட் நோட் கெட்டுப் போய்விட்டதாகப் பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்திருக்கிறார்.

விளம்பரஞ் செய்யுமுன் அவர் தமது பாக்கெட்டைத் தேடிப் பார்த்துக் கொண்டாரா, இல்லையா தெரியவில்லை.

★

'அர்ஜெண்டைன்' தேசத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டு இருபத்து நாலு மணி நேரத்தில் அது அடங்கிப் போய், ஒரு புதிய அரசாட்சியும் ஏற்பட்டு விட்டதாம்.

"அங்கே எல்லாம் 'அர்ஜெண்ட்' ஆக நடக்க வேண்டியதுதானே?" என்று தம்பி கூறுகிறான்.

★

"ஏன் எப்பொழுது பார்த்தாலும் வைஸ்ராய் மாளிகையின் பக்கம் சுற்றிக் கொண்டிருக்கிறீர்?"

"ஒரு வேளை திடீரென்று என்னை அந்தப் பதவிக்கு நியமித்து விட்டால் என்ன பண்ணுகிறது? காலதாமதமில்லாமல் பதவியை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டாமா?"

அரிசி மனு

"தூமிலன்"

● இந்த ஜன்மத்தில் நமக்கு வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகள் எல்லாம் நாம் போன ஜன்மத்தில் செய்த கர்மாவைப் பொறுத்திருக்கிறது, என்பதாகத்தானே பெரியவர்கள் சொல்கிறார்கள். உதாரணமாக, நாம் ரேடியோவைத் திருப்பும்போது ஒரு எலெக்டிரிக் ஷாக் அடிக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அதற்குக் காரணம் என்ன? நாம் அந்தத் தண்டனையை அடைவதற்கேற்ற ஏதாவது பாவகரமான காரியத்தைப் போன ஜன்மத்தில் செய்திருக்க வேண்டும். ஆனால் அது என்ன பாவம் என்று நம்மால் சொல்ல முடியாது.

இப்பொழுது, சென்னை, உதக மண்டலம், கோயமுத்தூர் நகரங்களில் வேலை பார்க்கும் பலருக்குத் தஞ்சாவூர் அல்லது திருச்சிராப்பள்ளி அல்லது திருநெல்வேலி ஜில்லாவில் நிலங்கள் இருக்கின்றன. இருந்தாலும் அவர்கள் தெனாலி, பெஜவாடா முதலிய இடங்களிலிருந்து கல், களி மண், உமி, தவிடு, மக்கல் நாற்றம் சமேதராய் வரும் அரிசியை ஒன்றுக்கு இரண்டு விலை கொடுத்து வாங்கிச் சாப்பிட வேண்டியிருக்கிறது. இந்தத் தண்டனைக்கு ஆளாகும்படி அவர்கள் போன ஜன்மத்தில் என்ன பாவம் செய்திருக்கக்கூடும்? யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை!

ஆனால் இந்தத் தண்டனைக்கு ஒரு பரிகாரமிருக்கிறது. உங்களுக்கு எந்த ஜில்லாவில் நிலமிருக்கிறதோ, அந்த ஜில்லாவின் கலெக்டருக்கு மனுச் செய்துகொண்டால் அவர் உங்கள் நிலத்தில் விளையும் அரிசியை நீங்களே சாப்பிடுவதற்கு எடுத்துக் கொண்டு போகும்படி அனுமதி கொடுப்பார்.

அதற்காக நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றும் பிரமாதமில்லை. அந்த அனுமதி பெறுவதற்காக ஒரு மனு நமூனா இருக்கிறது. அதற்கு ஒரு நாலணா கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பு ஒட்டி ஜில்லா கலெக்டருக்கு அனுப்ப வேண்டியது. அவ்வளவுதான். ஆனால் அத்துடன் 'ஈசுவரோ ரக்ஷது' என்று இருக்க வேண்டும். அப்படி இருந்தால் குறைந்தது கால் வருஷம் ஆவதற்குள்ளேயே அனுமதி நிச்சயம் கிடைத்து விடலாம்.

ஆனால் அனுமதி கிடைப்பதற்கு எதற்காக அவ்வளவு நாள் ஆக வேண்டும் என்று விஷயந் தெரியாதவர்கள் புகார் செய்து கொண்டிருக்கிறார்கள். மனுவைப் பைஸல் செய்வதில் உள்ள கஷ்ட நஷ்டங்களை அறிந்தால் அவர்கள் இப்படிப் புகார் செய்ய மாட்டார்கள். யுத்த விஷயங்களில் அதிகக் கவனஞ் செலுத்தி வரும் ஒரு நண்பர் இந்த மனுக்கள் பைஸல் செய்யப்படும் விதத்தைப் பற்றி 'அரிசி மனு' என்ற பெயருடன் ஒரு டயரி மாதிரி எழுதி வைத்திருக்கிறார்! அதிலிருந்து சில குறிப்புக்களைக் கீழே தந்திருக்கிறேன் :—

15 - 4 - 43

● சென்னையிலுள்ள அப்பாத்துரை முதலியார் தண்ணீர்ப் பந்தல் என்ற கிராமத்திலிருந்து ஒரு மூட்டை அரிசி தருவித்துக் கொள்ள அனுமதி கோரிய மனு, மெயில் வண்டியில் மணிக்கு இருபத்திரண்டு மைல் வேகத்தில் பறந்து கலெக்டர் ஆபீஸ் வந்து சேர்ந்தது. கலெக்டர் துரையின் சர்வ வல்லமையுள்ள டபேதார் அந்த மனுவை சம்பந்தப்பட்ட குமாஸ்தா மேஜை மீது வீசி எறிந்துவிட்டுப் போனார்.

30 - 4 - 43

● அது டிபுடி கலெக்டர், தாசில்தார், ரிவின்யூ இன்ஸ்பெக்டர் இவர்களையெல்லாம் பார்த்துவிட்டுக் கிராமக் கணக்குப் பிள்ளையிடம் பத்திரமாக வந்து சேர்ந்தது.

4 - 5 - 43

● பாவம், கணக்குப் பிள்ளைக்குப் பல ஜோலி. மனு அவர் கைக்கு வந்து சேர்ந்த தினத்தன்று அவர் வீட்டில் திவசம்; மறு நாள் ஊரில் பெரிய பண்ணைக்காரர் வீட்டில் கல்யாணம்; அதற்கடுத்த நாள் அவருக்கு என்னமோ போலிருந்தது; அதற்கடுத்த நாள் அவர் கோர்ட்டுக்கு நிஜச் சாட்சி சொல்லப் போக வேண்டியிருந்தது. ஆகையினால் இன்று தான் மனுவை எடுத்தார். மனுவில் அப்பாதுரை முதலியாரின்

நிலங்களின் ஸர்வே நம்பர் 114, 215, 378 என்று வரிசையாகக் குறிக்கப்பட்டிருந்தன. அந்த நிலங்களுக்கு முதலியார் நிஜமாகவே சொந்தக்காரரா என்று அவர் கண்டு பிடிக்கவேண்டும்! அதற்காக நில விவரங்கள் எழுதி வைத்திருக்கும் அடங்கல் கணக்கைப் பார்த்தார். நம்பர் எல்லாம் சரியாயிருந்தது.

ஆனால் கணக்குப்பிள்ளை மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் காரியம் செய்பவர். ஆகவே வெட்டி, தலையாரிகள் தடிக்கம்பு, சங்கிலி முதலிய ஆயுதங்கள் தரித்துவர அவர் மூக்குக் கண்ணாடியைக் காதில் மாட்டிக்கொண்டு எல்லாருக்கும் தலைமை வகித்துத் தைரியமாய் வயல்களைப் பார்வையிடக் கிளம்பினார். சர்வே நம்பர் 114-க்கு அப்பாத்துரை முதலியார் சொந்தக்காரன் என்று அவருக்குத் தோன்றிற்று! சர்வே நம்பர்கள் 215, 378-க்கும் முதலியார் சொந்தக்காரன்! ஆனால் இதில் எந்த ஸர்வே நம்பர் வயலில் விளையும் நெல்லை எடுத்துக்கொண்டு போக அந்த முதலியார் அனுமதி கேட்கிறார் என்று கர்ணத்துக்குத் தெரியவில்லை. எப்படியாவது தொலைந்து போகிறான். மனு வந்து நாளாகி விட்டது. இதற்கு மேல் தாமதிக்கக் கூடாது என்று மனுவில் கையெழுத்துச் செய்து ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பி விட்டார்.

10 - 5 - 43

● மனு ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் வந்து சேர்ந்தது. அவர் அதைத் தமது ஆபீஸ் பெட்டியில் வைத்தார்.

11 - 5 - 43

● மனு அவர் பெட்டியில் இருக்கிறது.

12 - 5 - 43

● அது அவர் பெட்டியிலே இன்னும் இருக்கிறது.

13 - 5 - 43

● மழை பெய்கிறது. மனு அவர் பெட்டியிலே குளிரடக்கமாய் இருக்கிறது.

14 - 5 - 43

● அப்பாத்துரை முதலியார் தமது மனுவுக்குப் பதில் வரவில்லையென்று கடிதம் எழுதவே அதை மேலதிகாரிகள் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பினார்கள். தாமதத்துக்கு அவருடைய சமாதானமும் கேட்டிருந்தார்கள். அந்தக் கடிதத்தைக் கண்டதும் வேறு வழியில்லாமல் அவர் தமது தபால் பெட்டியைத் திறந்து பார்க்க வேண்டியதாயிற்று. அதிலிருந்த முதலியாரின் மனு அவர் கண்ணில் படவே அதில் கையெழுத்துப் போட்டு அனுப்பி விடுவதென்று தீர்மானித்து விட்டார்.

ஆனால் தாமதப் படுத்தியதற்குச் சமாதானம் சொன்னால் அது நேர் முகமாகவோ மறைமுகமாகவோ எதிரிகளுக்குப் பயன்படக் கூடிய தகவல்களைத் தெரிவிப்பதாகுமாதலால் அவர் சமாதானமே எழுதவில்லை.

15 - 5 - 43

● மனு தாலுகா ஆபீஸ் ரெவின்யூ குமாஸ்தா அவர்கள் மேஜைக்கு வந்துவிட்டது. அவர் சேவகனைக் கூப்பிட்டு, "இந்தச் சனியனையும் எடுத்துப் பாக்கி மனுக்களோடு கட்டி வை" என்று உத்திரவு போட்டார்.

22 - 5 - 43

● மனு குமாஸ்தாவின் கைக்கு வந்து ஒரு வாரத்துக்கு மேல் ஆகிவிட்டதால் இனிமேல் நடவடிக்கைகள் ஆரம்பித்தாக வேண்டியதுதான் என்று அவர் தீர்மானித்தார். ஆனால் நடவடிக்கை எப்படி ஆரம்பிப்பது?

23 - 5 - 43

● மனுவில் தாசில்தாரிடம் ஒரு கையெழுத்து வாங்கிக் கலெக்டருக்குத் திரும்ப சமர்ப்பித்துக் கொள்ள வேண்டியதுதான் நடவடிக்கை.

24 - 5 - 43

● கட்டிப் போட்டிருந்த அப்பாத்துரை முதலியாரின் மனு திடீரென்று காணாமற் போய்விட்டது! குமாஸ்தா அதை எங்கெங்கேயோ தேடிப் பார்த்தார். அகப்படவில்லை. அவர் காப்பி சாப்பிடப் போன ஹோட்டலில் கூட அது காணப்படவில்லை. அவர் பிள்ளையின் பெட்டியில் கூட இல்லை.

25 - 5 - 43

● ரெவின்யூ குமாஸ்தா, முதலியாரின் மனுவைத் தமது பரம விரோதியாகக் கருதினார். அந்த விரோதி எங்கே மறைந்து கொண்டிருக்கும்? பீரோவிலிருக்கும் கடிதாசையெல்லாம் மேஜை மீது வாரிப் போட்டார். பிறகு மேஜை மீது வாரிப் போட்டதையெல்லாம்

பீரோவுக்குள் எடுத்துத் திணித்தார். அப்படியும் எதிரி அகப்படவில்லை.

28 - 5 - 43

● இன்று அப்காரி குமாஸ்தா ஒரு தஸ்தாவேஜிக் கட்டைப் பிரித்தபோது ஒடுக்கிட்டுப் போனார். ஐந்தாம் படை ஆசாமியைக் கண்டதுபோல் நடுநடுங்கினார். அப்காரி சம்பந்தமான கடிதங்களுடன், அரிசி அனுப்ப அனுமதி கோரும் முதலியாரின் மனு கலந்திருப்பதைக் கண்டால் பயந் தோன்றுவது சகஜந்தானே? உடனே ஒரு தரம் வெற்றிலை போட்டுக்கொண்டு விஷயத்தை மனு சம்பந்தப்பட்ட குமாஸ்தாவுக்கு ரகசியமாகச் சொன்னார். உடனே ரெவின்யூ குமாஸ்தா அதை எடுத்துக்கொண்டு போய்த் தமது மேஜை அறைக்குள் சிறை வைத்தார்.

29 - 5 - 43

● எல்லாம் அமைதியா யிருந்தது. எதிரி சிறையிலேயே இருந்தது. தப்ப முயற்சிக்கவில்லை.

? - 6 - 43

● எல்லாம் மிக, மிக, அமைதியா யிருந்தது. ஆனால் அப்காரி குமாஸ்தா ரெவின்யூ குமாஸ்தாவைப் பார்த்து 'எங்கானும்! என்னிடம் வந்து ஒளிந்து கொண்ட அந்தமனுவை எப்படி டைஸ்ஸல் செய்தீர்?" என்று கேட்டார். "என்ன ஐயா ஒளிந்து கொண்டிருந்தது?" என்று ஹெட் குமாஸ்தா விசாரித்தார். 'அரக்கானில் ஜப்பானியர்கள் மரத்தின் மேல் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்" என்றார் அப்காரி குமாஸ்தா. "போன மாதம் எதிரியின் நீர்மூழ்கிக் கப்பலால் அதிகச் சேதமில்லையாமே. நீர்மூழ்கிக் கப்பலினால் மட்டும் ஜெர்மனி ஒருநாளும் ஜெயித்துவிட முடியாது என்பது என்து தீர்மானமான அபிப்பிராயம்" என்றார் ஸ்டாம்பு குமாஸ்தா. "இருந்தாலும் அது நேச தேசங்கள் கப்பல் கட்டுவதைப் பொறுத்திருக்கிறது. சென்ற மூன்று மாதத்தில் அமெரிக்காவில் மட்டும் கட்டப்பட்ட கப்பல்களின் கணக்கையும், எதிரிகளால் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களையும் கவனித்துக் கொண்டு, அதே சமயத்தில் ஆகாய விமானங்கள் ஜெர்மனியில் ரூர் பிரதேசத்தில் தண்ணீர் தேக்கங்களைக் குண்டுகளினால் தகர்த் தெறிந்ததையும், ரூஸ்வெல்ட் துரை சர்ச்சிலோடு பேசிக்கொண்டிருந்தபோது நடுவில் பசி யென்று எழுந்திருந்து போனதையும் கவனித்தால் ஜனங்கள் அரிசி......" என்று ரெவின்யூ குமாஸ்தா தம்மையு மறியாமல் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது "என்ன ஐயா! அரிசி பர்மிட் மனுக்கள் எல்லாம் என்ன ஆயிற்று?" என்று தாசில்தார் திடீரென்று அங்கே வந்து கேட்டார்.

தாசில்தாரைக் கண்டதும் குமாஸ்தாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "அதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். இன்று கையெழுத்துக்கு அனுப்புகிறேன்" என்று சமாதானம் கூறித் தப்பிக் கொண்டார். அன்றே மேஜையில் பூட்டி வைத்திருந்த முதலியாரின் மனுவைத் தாசில்தாருக்கு அனுப்பினார்.

5 - 6 - 43

● தாசில்தார் தாலுக்காவில் 'எங்கேயோ ஓரிடத்தில்' முகாம்செய்திருந்ததால் முதலியாரின் மனுவில் இன்றுதான் கையெழுத்துப் போட்டார்.

11 - 6 - 43

● கடைசியில் அரிசி தருவித்துக் கொள்ள அனுமதி கிடைத்து விட்டது. ஆனால் அதில் அரிசி மூட்டை ஏற்ற வேண்டிய இடம் 'செம்பொன்னார் கோயில்' என்பதற்குப் பதில் 'வைத்தீசுவரன் கோயில்' என்று போட்டிருந்தது. அதனால் அதை மறுபடியும் அதிகாரிகளுக்குத் திருப்பி யனுப்ப வேண்டியதாயிற்று.

18 - 6 - 43

● இந்தத் தடவை அனுமதிச் சீட்டிலிருந்த தவறைத் திருத்தி ஒரு வாரத்துக்குள்ளேயே அனுப்பி விட்டார்கள்.

ஆனால் அனுமதிச்சீட்டின்படி மே மாதத்திற் குள்ளேயே அரிசி தருவித்திருக்க வேண்டும். அந்தக் கெடு தவறி விட்டதால் ஸ்ரீ அப்பாத்துரை முதலியார் மறுபடியும் இப்பொழுது அனுமதிச் சீட்டுக் கோரி யிருக்கிறார்.

அரட்டைக் கச்சேரி

● "அது யாருங்காணும் உம்மோடே இத்தனை நாழி பேசிக் கொண்டிருந்தது?" என்று வராகசாமி விசாரித்தார்.

"எங்க ஊர். மனுஷன் தங்கம் என்றால் தங்கம்."

"அப்படியென்றால் சுத்த விவஸ்தை இல்லாத ஆசாமியா யிருக்க வேண்டும்."

"நீர் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே."

"உமக்கு என் புரியப் போகிறது? தங்கத்துக்கு விவஸ்தையே கிடையாது?"

"எந்தத் தங்கத்துக்கு? உம்ம தங்கை பெண் தங்கத்துக்கா?"

"இல்லை ஸ்வாமி! ஸ்வர்ணம், தெரியாதா?"

"அது எந்த ஸ்வர்ணம்? உங்க பேத்தியா?"

"இல்லை ஓய்! பவுன் இருக்கிறதே, பவுன் அதைச் சொல்கிறேன்."

"ஓஹோ! நகை பண்ணிப் போட்டுக் கொள்கிறார்களே, அதுவா? அதற்கு ஏன் விவஸ்தை இல்லை?"

"பின்னே அதன் விலை விவஸ்தை யில்லாமல் ஏறுகிறதையும் இறங்குகிறதையும் பாருங்களேன். யுத்தம் ஆரம்பித்த சமயத்திலே இருபது இருபத்திரண்டு ரூபாய் விற்றது. கொஞ்சம் கொஞ்சமாக ஏறிக் கொண்டே போயிற்று."

"எண்பது ரூபாய் வரையில் கூடப் போயிற்றுமே."

"ஆமாம். மறுபடியும் ஐம்பத்திரண்டு ரூபாய்க்கு வந்தது. இப்போது மறுபடியும் விலை ஏறிப் போய் விட்டது. இன்று விலை அறுபது ரூபாய், தெரியுமா?"

● "ஏன் இப்படி தங்கத்தின் விலை ஏறிற்று?"

"முதல் காரணம், நம்ப தேசத்திலே யிருந்து வருஷா வருஷம் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமான தங்கம் சீமைக்குப் போய்க் கொண்டிருந்திருக்கிறது. அப்புறம் இப்போ யுத்தத்தினாலே விலை ஏறிப் போய் விட்டது."

"தெரிகிறது, தெரிகிறது!"

"என்ன தெரிகிறது?"

"யுத்தத்தில் நன்றாய்ச் சண்டைப் போட நிறையப் பலம் வேண்டுமோனோ! அதற்காகச் சிப்பாய்களுக்குத் தங்க பஸ்பம் பண்ணிக் கொடுக்கிறானாக்கும்."

"ஓய்! இப்படிப் பேசினால் நீர் சர்க்கார் பிரசார இலாகா அதிகாரியாய்த்தான் போக வேண்டும்."

"ஐயோ, எனக்கு அந்த உத்தியோகம் வேண்டாம். இல்லாததையும், பொல்லாததையும் சொல்ல எனக்குத் தெரியாது. தங்கத்துக்கு என்ன வந்து விட்டது என்று சொல்லும்."

● "கிராமாந்திரத்திலே மிராசுதார்களும், குடியானவர்களும் இருக்கிறார்களோனோ. அவர்கள் நெல்லை விற்று நிறையப் பணம் சம்பாதித்துத் தங்கத்தை வாங்கி அமுக்கி விட்டார்களாம்."

இசைத் தட்டு

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் பந்துவராளி ஆலாபனம் தமிழ் நாட்டில் விசேஷ புகழ் பெற்றிருக்கிறது. ஒரே நிமிஷத்திற்குள் பந்து-வராளியின் முழு உருவமும் பூரணக் களையுடன் தோன்றும்படி ஆலாபனம் செய்யலாம் என்பதை எச். எம். வி. நம்பர் 18680 இசைத் தட்டில் அவர் நிரூபித்திருக்கிறார். பிறகு, பரம பக்தரான ஸ்ரீ ராமதாஸ் ஸ்வாமி இயற்றிய "என்னகானு ராம பஜனை" என்னும் பிரசித்தமான கீர்த்தனத்தைப் பாடி யிருக்கிறார். சரணத்தில், "ராமராம ராம வனுஸ" என்னுமிடத்தில் கோலக் கிளியுடனே கோகிலம் கொஞ்சுவதைக் கேட்கலாம்.

வஸந்தா ராகத்தில் "மா தயை" என்னும் பாபநாசம் சிவன் கீர்த்தனத்தை எச். எம். வி. நீ 18208 இசைத் தட்டில் ஸ்ரீமதி எம். எஸ். பாடி யிருக்கிறார். அந்த அருமையான தமிழ்க் கீர்த்தனத்தில் "முருகனே! குகனே!" என்று கதறும் இடம் கல்லையும் கனியச் செய்யும். கிட்டா ஸ்வரம் அழகாக அமைந்திருப்பதுடன், அபரிமிதமான துரித காலத்தில் பாடும்போதும், ஸ்வரங்கள் மணி மணியாக விழுந்திருக்கின்றன. எம். எஸ். ஸின் குரல் இனிமையையும் ஸாஹித்யத்தின் பெருமையையும் எடுத்துக் காட்டும் முறையில் எச். எம். வி. வாத்திய கோஷ்டியார் வாசித்திருக்கிறார்கள்.

"அப்படியானால் நான் இன்றைக்கே எங்க ஊருக்குக் கிளம்புகிறேன்."

"ஏங்காணும்?"

"எந்தக் குடிசைப் பக்கமாவது திரிந்து கொண்டிருந்தால் குடியானவர்கள் வைத்துக் கொண்டிருக்கும் தங்கத்தில் கொஞ்சம் கீழே விழுந்து கிடக்கும். பொறுக்கிக் கொண்டு வருகிறேன்."

"பயித்தியமே! கிராமத்தில் தங்கத்தை அமுக்கி விட்டார்களென்று நான் சொல்லவில்லை. லண்டனில் அமெரி துரை என்று ஒருவர் இருக்கிறாரே அவர் இப்படி உளறுகிறார். அவனவன் இரண்டு வேளை வயிறு சாப்பிட்டுக் காலம் கழித்தால் போதுமென்றிருக்கிறது. தங்கத்துக்கு எங்கே போகிறது யுத்த பயத்தினாலே சில பேர் கையில் பணமாக வைத்துக் கொள்ளாமல் தங்கமாக மாற்றி வைத்துக் கொண்டிருக்கலாம். அதனால் ஏராளவு அது புழக்கத்தி லில்லாமல் விலை ஏறக்கூடும். ஆனால் முக்கிய காரணம் தங்கம் கையிருப்பு தேசத்தில் முன்னிருந்ததை விடக் குறைந்து கொண்டே போவது தான். இன்னும் நாணயச் செலாவணி......"

"ஐயா! தலையை வலிக்கிறது. இதைப் பற்றி அப்புறம் உம்மிடம் சாவகாசமா விசாரித்துக் கொள்கிறேன். ஏன் வராகசாமி? நிறைய பவுனிருந்தால் இப்பொழுது நல்ல விலைக்கு விற்கலாமோனோ?"

"பேஷா!"

"ஹம்!"

"ஏன் ஐயா பெருமூச்சு விடுகிறீர்?"

"நான் மட்டும் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தால், அவளுக்கு நகை போட்டிருப்பார்கள். அதை இப்போ விற்று நிறையப் பணம் கிடைக்குமல்லவா?"

★ "போதும்; மேலே சொல்ல வேண்டியதில்லை, ஆதித் அண்ணா!" என்றதும் லாவண்ய பெருமூச்செறிந்தாள். பிறகு, "அந்த நாள் திரும்பி வரப் போகிறதா?" என்று கூறிவிட்டு, வேகமாக எழுந்து போக முயன்றாள்.

பூந்தோட்டம்

ஆசிரியர்
ரவீந்திர நாத் தாகூர்
மொழிபெயர்ப்பு
த. நா. குமாரஸ்வாமி

பத்தாம் அத்தியாயம்
அரும்பு மலர்ந்தது!

● "இரு, லாவண்ய, போகாதே! சற்று உட்கார்" என்றான் ஆதித்தியன். அவனுடைய முகத்தைப் பார்த்தவுடன் லாவண்யவின் இருதயம் வெடித்து விடும் போலிருந்தது. எதற்கும் சிளைக்காமல் கருமமே கண்ணாகத் தன்னையும் மறந்து இருக்கும் இந்த உத்தம புருஷன், இத்தனை நாழிகை, ஒரு நோக்கமுமின்றிச் சுற்றிச் சுழன்று திரிந்து கொண்டிருந்தான்; சுக்கான் முறிந்து அலையில் மோதுண்ட மரக்கலம் போல்.

"நாம் இருவரும் இந்த உலகில் வாழ்க்கையை ஒன்றாகத் தொடங்கினோம்; — ஒரே நோக்கத்துடன். இவ்வளவு சகஜமாக நாம் ஒன்றுபட்டு இழையும்போது, இதற்கிடையே ஏதாவது வித்தியாசமோ ஏதாவது பேதமோ ஏற்படுமென்று எண்ணவேண்டியதே இல்லை. நான் சொல்வது சரிதானே?" என்றான் ஆதித்தியன்.

"குருத்து விடும்போது ஒன்றாகத்தான் இருக்கும்; ஆனால் வளர வளர இரண்டாகப் பிரிந்து விடவில்லையா? உனக்குத் தெரியாதா இது, ஆதித் அண்ணா?"

"அந்தப் பிரிவு வெளித் தோற்றமே தவிர வேறல்ல. உள்ளத்தில் நம்மிருவரின் உயிரும் ஒன்றுதான்; இரண்டல்ல! இன்று என்னிடத்திலிருந்து உன்னைப் பிய்த்துச் செல்வதற்காகப் பெரிய அதிர்ச்சி ஒன்று தோன்றியிருக்கிறது. அது என்னை இவ்வளவு பாதிக்குமென்று நான் ஒருநாளும் நினைத்ததில்லை."

"நீ தெரிந்து கொள்வதற்கு முன்பே எனக்குத் தெரியுமே?"

"நீ சகித்துக் கொள்ளுவாயா?"

"சகித்துக் கொள்ள வேண்டியதுதான்."

"சகிக்கக்கூடிய தன்மை புருஷர்களைக் காட்டிலும் பெண்களுக்கு அதிகமிருக்குமா என்றுதான் யோசிக்கிறேன்."

"புருஷர்களான நீங்கள் துயரத்தோடு போராடுகிறீர்கள். பெண்களான நாங்கள் யுக யுகமாய் வெறும் துயரையே சகித்துக் கொண்டு வருகிறோம். கண்ணீர் சிந்துவது, பொறுத்துக் கொள்வது இவற்றை விட எங்களுக்கு வேறு பெருமை என்ன இருக்கிறது?"

"என்னை விட்டு உன்னைப் பிரித்து வைப்பது ஒரு போதும் நடக்காத காரியம். நான் அதற்கு இடம் தரமாட்டேன். இது பெருத்த அநியாயம். கொடுமையான அநியாயம்!" என்றதும் ஆதித்தியன் கைகளை முஷ்டியிட்டு ஆகாயத்தை நோக்கி ஒரு கற்பனைச் சத்துருவுடன் சண்டை துவக்க ஆயத்தமானான்.

லாவண்ய, தன் மடிமீது ஆதித்தியனின் கைகளை இழுத்து வைத்துக்கொண்டு, அவற்றை மெல்லத் தடவி அவனைச் சாந்தப்படுத்தினாள். தனக்குத் தானே கூறிக் கொள்வதுபோல் தாழ்ந்த குரலில், "நியாய அநியாயம் கிடக்கட்டும். விவாதப் பின்னலில் சிக்கு விழுந்தால் யாருக்கும் கோபந்தான் வரும். பல திக்கிலிருந்தும் பலர் நம்மை

இழுத்து எறியப் பார்ப்பார்கள்! யாரை நாம் தூஷிப்பது?" என்றான்.

"இல்லை, உன்னால் சகித்துக் கொள்ள முடியும். அன்று ஒரு நாள் நடந்த விஷயம் என் ஞாபகத்திற்கு வருகிறது. உன் தலையில் அப்போது தலை மயிராவது தலை மயிர்! அவ்வளவு இருந்தது. இப்போதும் குறைவில்லை. அந்தச் செறி குழலுக்குச் சொந்தக்காரி யென்ற கர்வம் உனக்கு ரொம்ப உண்டு. ஒருநாள் உனக்கும் எனக்கும் என்னவோ சிறு பிள்ளைத்தனமான சண்டை உண்டாயிற்று. அன்று பகல் கூந்தலைத் தலையணைமேல் விரித்து விட்டு நீ அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாய். நான் மெல்லக் கத்திரிக்கோலை எடுத்துப் பாதியளவிற்குக் கூந்தலைக் கத்திரித்து விட்டேன். நீ உடனே விழித்துக் கொண்டாய். உன் கருமையான கண்கள் பின்னும் கருத்து ஒளிர்ந்தன. 'என் கர்வத்தைப் போக்கத்தானே இந்த வேலை?' என்று சொல்லி விட்டு நீ என் கையிலுள்ள கத்திரியைப் பிடுங்கிக்கொண்டு மட மடவென்று கழுத்து மட்டம் மயிரை வெட்டித் தீர்த்து விட்டாய். உன்னைப் பார்த்தவுடன் உன் பெரியப்பா பிரமித்துப் போனார். 'இதென்ன கோலம்!' என்றார். நீயோ முகத்தில் துளியாவது வருத்தம் காட்டாமல் 'ரொம்ப நிறுக்கமா யிருக்கது' என்று பதில் சொல்லி விட்டாய். அவரும் சிரித்து விட்டு அதை ஒரு வேடிக்கையாகவே பாவித்தார். கோபித்துக் கொள்ளவில்லை; வையவில்லை. கத்திரியை எடுத்து உன் கூந்தலை ஒழுங்காக ஒரு மட்டமாய் வெட்டி விட்டார். உனக்கேற்ற பெரியப்பாதானே!"

ஸரளா சிரித்து, "என்ன புத்தி உனக்கு! அப்படி நான் செய்தது உன்னிடம் மன்னிப்பைப் பெறுவதற்காகவென்று நினைத்தாய் போலும்! ஒரு காலும் இல்லை. அன்று என் கர்வத்தை அடக்க நீ செய்ததைவிட இன்னும் எத்தனையோ மடங்கு அதிகமாக உன் செருக்கை நான் குலைத்து விட்டேனே; இல்லையா சொல்லு?" என்றாள்.

"வாஸ்தவமே. கத்திரித்த அந்தத் தலை மயிரைக் காணும்போதெல்லாம் எனக்கு அழுகையாக வந்தது. உன் முகத்தைப் பார்க்க எனக்கு லஜ்ஜையாகவே இருந்தது. படிக்கும் அறையில் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். நீ உள்ளே வந்து என் கையைக் கரகரவென்று பிடித்திழுத்து ஒன்றுமே மனத்தில் வைக்காமல் தோட்ட வேலையைக் கவனிக்க என்னை அழைத்துச் சென்றாய். இன்னொரு நாள் நடந்த விஷயமும் எனக்கு ஞாபகம் வருகிறது. அது ஒரு சித்திரை மாதம்



"ஸரளா, என்ன அற்புதமாய் இருக்கிறாய்!..."

நடந்தது. ஒரு நாள் அகாலத்தில் பலத்த காற்றடித்து மழை பெய்ததில் நான் படுத்துக் கொள்ளும் அறையின் கூரை அப்படியே அடித்துக்கொண்டு போய்விட்டது, அப்போது நீ அங்கே வந்து —"

"போதும்; மேலே சொல்ல வேண்டியதில்லை, ஆதித் அண்ணா!" என்றதும் ஸரளா பெருமூச்செறிந்தாள். பிறகு, "அந்த நாள் திரும்பி வரப்போகிறதா?" என்று கூறிவிட்டு, வேகமாக எழுந்து போக முயன்றாள்.

ஆதித்தியன் வியாகுலமுற்று ஸரளாவின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு,



"போகாதே.....இதற்குள் போய்விடாதே... போவதற்குச் சமயம் வரும்போது போகலாமே" என்றான்.

இதைச் சொன்னதுமே அவன் உணர்ச்சியின் வேகத்துடன், "அந்த மாதிரி சமயம் வந்தாலும் நீ ஏன் போகவேண்டும்? அப்படி என்ன தப்பு நடந்துவிட்டது! அழுக்காறு! பொறாமை! இந்தப் பத்து வருஷ காலமாகச் சம்சார யாத்திரையில் நான் கண்டதெல்லாம் இந்த மாறுதல்தானா! மனத்துள் எதற்காக இந்த மாசு? அப்படி இருந்தால் என்னுடைய முப்பது வருஷத்துச் சரித்திரத்தையே அழித்து விடவேண்டும் — உன்னை நான் முதன் முதலில் பார்த்ததே பிடித்து எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும்" என்றான்.

"முப்பது வருஷத்துக் கதையைப் பற்றி இப்போது பேச வேண்டாம். முப்பது வருஷங்களுக்குப் பிறகு கடைசியாகப் பொறாமை மூள்வதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டுமோ இல்லையோ? நாம் எதையும் உண்மையாகப் பார்க்க வேண்டும், ஆதித் அண்ணா! நம்மையே நாம் மறந்து விடுவதனால் என்ன பயன்? உனக்கும் எனக்கும் இடையே யாதொரு ஒளிவு மறைவான பேச்சமே இருக்கக் கூடாது."

ஆதித்தியன் சற்று நேரம் அசையாமலே அமர்ந்திருந்தான். பிறகு, "ஒளிவு மறைவு இனிமேல் ஏது? ஒருவர் உள்ளத்தை ஒருவர் அறிந்து கொண்டாகி விட்டது. நீ இராது போனால் இந்த உலகம் எனக்குப் பாழ்! வாழ்க்கை தொடங்கிய புதிதில் எவரிடமிருந்து உன்னைப் பெறுவதற்குக் கொடுத்து வைத்தேனோ அவரைத் தவிர உன்னை வேறு எவராலும் என்னிடமிருந்து கவர்ந்து செல்ல முடியாது" என்றான்.

"இதற்குள் வாயை விட்டு விடாதே, ஆதித் அண்ணா! துன்பத்தை மேலும் பெருக்கிக்கொள்ள வேண்டாம். நிதானமாக யோசனை செய்."

"யோசனை பண்ணினால்தான் என்ன? எடுத்த காலை முன் வைப்பேனே தவிரப் பின்னால் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டேன். உன் பெரியப்பாவின் மடியில் நாம் இருவரும்

வாழ்நாளைத் தொடங்கியபோது இதையெல்லாம் பற்றிச் சிந்தனை செய்தோமா? அத்தகைய வாழ்வை இன்று தலை கீழாகக் கவிழ்த்து விடுவேனா என்ன? அவ்வாறு செய்ய என்றால் ஆகாது!"

"காலில் விழுந்து வேண்டிக் கொள்கிறேன். என் மனம் தளரும்படி செய்ய வேண்டாம். என் விடுதலைக்கான வழியில் குறுக்கே நிற்காதே."

ஆதித்தியன் லரனாவின் கையைப் பற்றி "விடுதலைக்கான வழியே இல்லை; அந்த வழியை நான் அடைத்து விடுவேன். எனக்கு உன் மேல் அளவற்ற காதல். இந்த வார்த்தையை இவ்வளவு எளிதாக, இவ்வளவு உண்மையாக நான் சொல்லத் துணிந்தேனே! என் உள்ளம் நிறைந்திருக்கிறது. முப்பது வருஷம் அரும்பாக இருந்தது. இன்று தெய்வாதீனமாய் மலராகத் திகழ்கிறது! இதை நசுக்குவதென்னவோ கோழைத்தனமாகும்அ; தர்மமாகும்" என்றான்.

"உஸ்! வாயை மூடு!...பேசாதே! இன்று ஓர் இரவு மாத்திரம் என்னை மன்னிப்பாய்."

"லரனா, உன் கருணைக்குப் பாத்திரம் நானே; வாழ்க்கையின் இறுதிக் காலம் வரைக்கும் உன் மன்னிப்பைக் கோரி நிற்பவன் நானே. ஏனோ இத்தனை நாள் என் கண் அவிந்திருந்தது? உன்னை அறிந்து கொள்ளாமல் இருந்தேனே! புத்திப் பிசகி ஏனோ இந்த விவாகம் செய்துகொண்டேன்? நீ மட்டும் பண்ணிக் கொள்ளாமலே இருக்கிறாய்! எத்தனையோ வரன்கள் உனக்காகக் காத்திருந்தன. எனக்குத் தெரியும்."

"பெரியப்பா என்னைத் தோட்டப் பணிக்காகவே அர்ப்பணம் செய்துவிட்டார்; இல்லாமற் போனால் ஒருவேளை —"

"இல்லை, இல்லை, உன் மனத்தின் ஆழத்தில் உன் உண்மையான ஒளி அடங்கி இருந்தது. தெரியாமலே அவரிடம் நீ கட்டுப்பட்டிருந்தாய். என் கண்ணை நீ அப்போதே திறந்து விடக்கூடாதா? நாம் செல்லும் பாதை ஏனோ இவ்வாறு வெவ்வேறு திசையாகப் பிரிந்து விட வேண்டும்?"

"இருக்கட்டும்; தலைவிட்டுக் கொண்ட பிறகு அந்தத் தவறுக்காக யாருடன் முட்டிக் கொள்வது? அனுவசியமான வேதனைக்கு ஆளாகித் துடிப்பானேன்? நாளைப் பகலில் மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பற்றி ஏதாவது ஒரு முடிவு செய்து கொண்டால் போகிறது."

"சரி, வாயை மூடிவிட்டேன். ஆனால் இந்த மாதிரி நிலவு பொழியும் இரவில் நான் பேசியது உன் கவனத்தில் இருக்கும்படியாக ஏதாவது ஓர் அடையாளம் நான் விட்டுச் செல்ல வேண்டுமே."

தோட்ட வேலைக்குப் பயன்படக் கூடியதான ஒரு பையை ஆதித்தியன் தன் அரையில் செருகிக் கொண்டிருப்பான். அதில் ஏதாவது புஷ்பங்கள் சேகரித்து வைப்பது வழக்கம். அந்தப் பையிலிருந்து ஐந்து நாககேசர புஷ்பம் அடங்கிய ஒரு சிறு சரத்தை வெளியே எடுத்தான். "உனக்கு நாககேசர மலரென்றால் ஆசையாயிற்றே! உன் கழுத்தில் அதைச் சூட்டலாமா? வேட்டி பின் என்னிடம் இருக்கிறது" என்றான்.

லரனா அவனைத் தடுக்கவில்லை.

ஆதித்தியன் சற்று மெதுவாகவே மாலையை அவள் கழுத்தில் சூட்டினான். லரனா எழுந்து நின்றாள். ஆதித்தியன் அவளுடைய முன்னால் வந்து, அவள் இரு கைகளையும் மெல்லப் பற்றி அவளுடைய முகத்தையே வைதுருவி நோக்கினான், வானில் உலாவும் அம்புலியைக் கூர்ந்து பார்ப்பது போல.

"லரனா, என்ன அற்புதமாய் இருக்கிறாய்! என்ன அற்புதமான அழகு!"

லரனா தன் கைகளை வாங்கிக்கொண்டு, ஒரே துள்ளாக அவ்விடத்தை விட்டு அகன்றாள். ஆதித்தியன் அவளைப் பின் தொடரவில்லை. அவள் கண்ணுக்கு மறையு மட்டும் அவளையே பார்த்துக் கொண்டு மரமென நின்றிருந்தான். அப்பால் அந்தப் படித்துறையின் அருகில் உள்ள மேடையில் உட்கார்ந்து விட்டான். "சாப்பாடு வந்திருக்கிறது" என்று வேலையாள் அங்கே வந்து அறிவித்தான்.



"எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்றான் ஆதித்தியன்.

(தொடரும்)



மதராஸ் ஆபீஸ்: 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

★ சனி புதனைப் பார்ப்பான், புதன் லக்கினத்தைப் பார்ப்பான், லக்கினம் மாமாவைப் பார்க்கும்! ....

எங்கள் மாமா

—நாடோடி—

● இதோ பத்திரிகையும் கையுமாக வருகிறாரே, அவர்தான் எங்கள் மா— அடே! எங்கே மாமாவைக் காணோம்! "மாமா, இங்கே வாங்கோ மாமா! இவான் உங்களைப் பார்க்கணும்னு வந்திருக்கா!" — ஊஹூம்! அவர் இன்னும் பத்து நிமிஷத்துக்கு இந்தப் பக்கம் தலையைக் காட்ட மாட்டார்.

எங்கள் மாமாவே இப்படித்தான். யாராவது புது மனிதர்கள் வீட்டுக்கு வந்தால் உடனே ஓடிப் போய் 'டிரஸ்ஸிங்' ரூமில் ஒளிந்து கொண்டு விடுவார். இதனால் எங்கள் மாமா சங்கோஜப் பிராணி என்று நினைத்து விடாதீர்கள். அவர் அப்படி ஒளிந்து கொள்வதற்குக் காரணம் ...... இதோ அவரே வந்துவிட்டாரே! அவரைப் பார்த்தாலே காரணம் தெரியுமே!

● என்ன, இன்னும் தெரியவில்லையா? இதோ இந்தப் பக்கத்தில் உள்ள படத்தைப் பாருங்கள். இதில் பஞ்ச கச்சம், யோக வேஷ்டி, மேல் துண்டு, உத்திராட்சம் சகிதம் காட்சி யளிக்கிறார் அல்லவா? ஆனால் இந்த தரிசனம் அவர் எங்கள் குடும்பத்தினருக்குத் தவிர வேறு யாருக்கும் கொடுப்பதில்லை என்று வைத்திருக்கிறார். ஆகவே யாராவது அவரைப் பார்க்க வந்தால், அவர் உடனே ஓடிப் போய் சூட், தலைப்பாகை, டை முதலியவை அணிந்து கொண்டு எதிர்ப் பக்கத்தில் உள்ள படத்தில் உள்ளதுபோல் காட்சி யளிப்பார்.

பஞ்சக்கச்சம், யோக வேஷ்டி, துண்டு முதலியன அணிந்து கொண்டிருக்கும் மாமா வேறு; சூட், டை முதலியன அணியும் மாமா வேறு என்பது எங்கள் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். பஞ்ச கச்சம் கட்டிக் கொண்டிருக்கும்போது எங்கள் எல்லாருடனும் தமாஷாகப் பேசிக்கொண்டு குஷாலாக இருக்கும் மாமா சூட் அணிந்துகொண்டதும் வேறு மனிதராக மாறிவிடுவார். பெரிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தருக்கு வேண்டிய 'ஜபர்தஸ்'தெல்லாம் அவருக்கு டக்கென்று வந்துவிடும். ஆள் நடையே ஒரு தினுஸாக மாறிவிடும். கடல் மடை திறந்தாற்போல் வார்த்தைகள் வெளிப் புறப்பட்டுக் கொண்டிருந்த அவர் வாயிலிருந்து, முனிசிபாலிடி குழாய்களில் தண்ணீர் வருவது போல் மெள்ள, மெள்ள, கால் மணிக்கு ஒரு வார்த்தை, அல்லது இரண்டு வார்த்தைதான் வரும்.

எங்கள் மாமா சென்ற முப்பது வருஷங்களாக சர்க்கார் உத்தியோகத்தில் இருந்து வருகிறார் என்பது தெரிந்தால் நீங்கள் இது குறித்து ஆச்சரியப்பட மாட்டீர்கள்.

● சர்க்கார் உத்தியோகஸ்தரான படியால் அவர் காரியங்கள் எல்லாம் சர்க்கார் காரியங்களைப் போலவே மெள்ள, நிதானமாக "சிவப்பு நாடா" முறைக்குப் பாதகம் வராமல் இருக்கும். நமக்கு ஏதாவது விசேஷமாகக் காரியம் ஆக வேண்டியிருந்தால், அதைக் குறைந்த பட்சம் இரண்டு மாதத்துக்கு



... காட்சி யளிக்கிறார் அல்லவா?

முன்பாகவாவது அவரிடம் எழுத்து மூலமாகத் தெரிவித்தால்தான் நடக்கும். அவரிடம் எங்களுக் கென்ன காரியம் ஆக வேண்டியிருந்தாலும், "உனக்கு என்ன வேணடும் என்பதை ஒரு கடிதத்தில் எழுதிக் கொடு, கவனிக்கிறேன" என்பார். நேரே அவ்வப்பொழுது காதால் கேட்டு, வாயால் பைஸல் செய்யும் வழக்கம் மாமாவிடம் கிடையாது. தம் காரியாலயத்தில் அனுஷ்டித்து அனுஷ்டித்துப் பழக்கமாகி விட்ட வழக்கத்தைத்தான் மாமா எங்களிடம் காண்பிக்கிறாரா, அல்லது இந்திய சர்க்கார் உத்தியோகத்துக்குத்தான் எங்களையெல்லாம் இப்படித் தயார் செய்கிறாரா என்பது தெரியவில்லை.

சர்க்காருக்கு உள்ளது போலவே இவருக்கும் ஒரு 'ஹோம் டிபார்ட்மெண்ட்' உண்டு. இந்த உள்நாட்டு இலாகாவுக்கு மந்திரி என் மாமிதான். வீட்டு விஷயமாக உள்ள எல்லாக் காரியங்களுக்கும் என் மாமிதான் பொறுப்பு. மாமியைத்தான் கேட்க வேண்டும். மாமாவைக் கேட்டால், "எனக்குத் தெரியாது; ஹோம் டிபார்ட்மெண்டைத்தான் கேட்க வேண்டும்" என்று சொல்லி விடுவார்.

● தங்கள் தினசரி காரியங்களை மணிக் கணக்காக ஒழுங்கு படுத்திக் கொண்டவர்களில் என் மாமாவை மிஞ்சக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்பது சந்தேகந்தான். காலையில் எழுந்திருப்பது, காப்பி சாப்பிடுவது, பத்திரிகை பார்ப்பது, ஸ்நானம் செய்வது, பூஜை அறைக்குள் நுழைவது, அதை விட்டு வெளியில் வருவது, சாப்பிட உட்காருவது, இலையை விட்டு எழுந்திருப்பது, 'டிரஸ்ஸிங் ரூ'முக்குள் நுழைவது, ஆபீசுக்குப் போவது, ஆபீஸிலிருந்து திரும்புவது, பீச்சுக்குப் போவது, பீச்சிலிருந்து திரும்புவது எல்லாம் மணிக் கணக்காக இருக்கும். இதனால் என்ன ஆகிவிட்டது என்றால், பக்கத்து வீட்டுக்காரர்கள், அதிலும் குறிப்பாக இந்த அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர் வீட்டில் உள்ளவர்கள், மணி தெரிய வேணடுமானால், குடுகுடு என்று மாமா வீட்டுக்கு வருவார்கள். வந்தால் வீட்டு ஹாலில் மாட்டப் பட்டிருக்கும் கடியாரத்தைக் கூடப் பார்க்க மாட்டார்கள். அது சரியான மணி காட்டும் என்ற நம்பிக்கை அவர்களுக்குக் கிடையாது. அதற்குப் பதில் எங்கள் மாமா என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார் என்று விசாரிப்பார்கள்.



அல்லது ஜன்னல் வழியாக அவர் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார் என்று எட்டிப் பார்ப்பார்கள்.

காப்பி சாப்பிடுகிறாரா, சரி, மணி 7-15; பத்திரிகையை மூடி வைக்கிறாரா, சரி, மணி 8-30; பூஜை அறைக்குள் நுழைகிறாரா, சரி மணி 9–15 என்று இப்படிக் கணக்குப் போட்டுக் கொள்வார்கள். நாங்கள் இங்கு இருக்கும் வரை பக்கத்து வீட்டுக்காரர்கள் கடியாரம் வாங்கப் போவதில்லை என்பது நிச்சயம்.

● மாமாவுக்கு ஜோதிஷத்தில் அபார நம்பிக்கை. யாராவது சற்று ஜோதிஷம் தெரிந்தவர்கள் வந்து விட்டால் போதும். உடனே தம் ஜாதகத்தை அவர்களுடன் ஆராய ஆரம்பித்து விடுவார். உடனே குரு சனியைப் பார்ப்பான், சனி புதனைப் பார்ப்பான், புதன் லக்கினத்தைப் பார்ப்பான், லக்கினம் மாமாவைப் பார்க்கும், மாமா ஜோஷிதரைப் பார்ப்பார், ஜோஷிதர் என்னைப் பார்ப்பார், நான் ஆகாயத்தைப் பார்ப்பேன் !

யாரோ ஒரு ஜோஸியன் அவருக்கு அவருடைய 45–வது வயதில் 'ஸர்' பட்டம் கிடைக்கும் என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். பாவம், 50–வது வயது பிறந்தும் இன்னும் ஸர் பட்டம் வரவில்லையே என்று அவருக்குக் கவலை. மாமியைப் பார்த்து "என் ஜாதக ரீதிப்படி எனக்கு 'ஸர்' பட்டம் கிடைக்கணும்னு இருக்கு. ஆனால் உன்

"ஜாதகப்படி நீ லேடி ஆகணும்னு இருக்கோ, இல்லையோ!" என்று அடிக்கடி குறைப்படுவார்.

● சாப்பாடு விஷயத்தில் மாமா மிகவும் கண்டிப்பு; நிறுத்துத்தான் சாப்பிடுவார். சிறைச்சாலைக் கைதிகள் விஷயமாகக் கூட இத்தனை கண்டிப்பு அனுஷ்டிக்கப் படுகிறதா என்பது சந்தேகம். பிடித்தமா யிருந்தால் நிறையச் சாப்பிடுவது, பிடிக்காவிட்டால் குறைத்துச் சாப்பிடுவது என்ற வழக்கம் அவரிடம் கிடையாது. வீட்டில் யார் வந்தாலும் சரி, குறிப்பிட்ட மணிக்குத்தான் சாப்பாடு கிடைக்கும்.

சாப்பாடு சமயத்துக்கு முன்னர் அவர்கள் ரயிலுக்குப் போக வேண்டியிருந்தால், அவர்களுக்கு ஹோட்டலில் விருந்து சாப்பாடு வரவழைத்துப் போடச் சொல்லுவாரே யொழிய, சமையற்காரனை அவசரமாகச் சமைக்கச் சொல்லி, தாமும், அவர்களுடன் உட்காரமாட்டார். தம் மூத்த பெண்ணுக்குக் கல்யாணமான சமயத்தில் சம்பந்திப் பேர்கள் ரயிலுக்குப் புறப்பட வேண்டியிருந்ததில் அவர்களுக்குப் பக்கத்து ஹோட்டலில் விருந்துதான் சாப்பாடு வரவழைத்துப் போட்டார்! இதைக் கண்டு கோபித்துக் கொண்டு போன சம்பந்திகள் அப்புறம் மாமா வீட்டுப் பக்கம் திரும்பவேயில்லை.

● மாமா பூஜை, ஜெபம் என்று ஏதோ வைத்துக் கொண்டிருக்கிறாரே யொழிய, தத்துவ விஷயமாகத் தம் மூளையைக் குழப்பிக் கொள்வது கிடையாது. பிரிட்டிஷ் ராஜாங்கம் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறதோ, அதே மாதிரிதான் கடவுளின் ராஜாங்கமும் இருக்கிறது என்பது அவர் நம்பிக்கை. எப்படி 30 வருஷகாலம் ஊழியம் புரிந்த பிறகு சர்க்காரில் பென்ஷன் கொடுக்கிறார்களோ, அதைப் போலவே கடவுளும் கொடுப்பார் என்பது அவர் நம்பிக்கை. எப்படி மேலதிகாரிகளைப் புகழ்ந்து பேசினால் அவர்கள் சந்தோஷப்பட்டு பிரமோஷன் கொடுப்பார்களோ, அதைப் போலவே, கடவுளும் புகழ்ச்சிக்கு வசப்படுகிறார் என்பது அவருடைய திடமான எண்ணம்.

அடடே! மாமா பூஜை அறைக்குள் நுழைந்து விட்டாரா! அப்படியானால் மணி 9–15 ஆகி விட்டது. நானும் ஆபீசுக்குப் போகத் தயாராக வேண்டியதுதான்!

சாதுரியக் கதை

● நாராயணய்யர் வீட்டில் ஏக அமளி அமளிப்பட்டது. அவரது ஏக புத்திரி பங்கஜத்துக்குக் கல்யாணம் என்றால் அமளி துமளிக்குக் கேட்பானேன்?

அப்பொழுது கல்யாண வீட்டில் ஒரு மனிதர் குறுக்கும் நெடுக்குமாகப் போய்க் கொண்டும், பிரமாதமான தடபுடல் செய்து கொண்டும் இருந்ததை எல்லோரும் கவனித்தார்கள். அந்த ஆசாமி, "உம்! மேளத்தைத் தட்டு, தட்டு!" என்று மேளக்காரரைக் கட்டளையிடுவதும், சம்பந்தி வீட்டுக்குப் போய், "புறப்படுங்கோ, புறப்படுங்கோ, நாழியாச்சு" என்று சொல்வதுமாயிருந்தார்.

நாராயணய்யர் அவரை சம்பந்தியகத்துக் காரரென்றும், சம்பந்தி வீட்டுக்காரர்கள் அவரை நாராயணய்யருக்குச் சொந்தக்காரரென்றும் எண்ணினார்கள்.

● கல்யாண தினத்தன்று சாயங்காலம் சம்பந்தியும் நாராயணய்யரும் பேசிக்கொண்டிருந்தபோது, "உங்கள் ஷட்டகர் இருக்கிறாரே? தங்கமான மனிதர்; நல்ல உபகாரி!" என்றார் சம்பந்தி.

"ஷட்டகரா? எனக்கு ஏது ஷட்டகர்?" என்று திடுக்கிட்டுக் கேட்டார் நாராயணய்யர்.

"உங்கள் ஷட்டகர் என்று அந்த மனிதர் சொன்னாரே?"

"என்ன என்ன? ஓஹோ! யாரோ அயோக்கியன் சந்தடி சாக்கில் புகுந்து அகப்பட்டதைத் தட்டிக்கொண்டு போவதற்காக வந்திருக்கிறான். அவனை லேசில் விடக் கூடாது. காண்பியுங்கள் அவனை!" என்று சொல்லிவிட்டு நாராயணய்யர் ஒரு சிட்டிகை பொடியை எடுத்துப் போட்டுக் கொண்டு கிளம்பினார்.

● "யாரய்யா நீர்? என் ஷட்டகன் என்று சொல்கிறீராமே!" என்று நாராயணய்யர் அந்த ஆசாமியைக் கேட்டார்.

"ஆமாம்; உங்கள் சாக்ஷாத் ஷட்டகன்தான் நான்!"

"யார், நீர் என் ஷட்டகனா? இது என்ன அக்கிரமம்! இவன் ஷட்டகனுமில்லை ஒன்றுமில்லை. மோசக்காரன்!" என்று இரைந்தார் நாராயணய்யர்.

"ஐயர்வாள்! நான் நிஜமாகவே உங்கள் ஷட்டகன்தான். நீர் பெரிய தனவான்; சாக்ஷாத் லக்ஷ்மியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்; அவள் அக்காளை நான் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறேன்!" என்றார் அந்த மனிதர் சாந்தமாக.

அவர் தன்னுடைய தரித்திரத்தைப் பற்றி இவ்வளவு சாதுர்யமாகச் சொன்னதைக் கேட்டு எல்லோரும் சிரித்து விட்டார்கள். அதன் பிறகு, உண்மையான ஷட்டகருக்கு மேலேயே அவருக்கு உபசாரம் நடந்தது!



தமிழ் வளர்ந்த கதை

பி.ஸ்ரீ.

7. பழைய தமிழ் நாகரிகம்

"தொல்காப்பியம் ஒரு இலக்கணம்தானே: அதை ஏன் இவ்வளவு பிரமாதப்படுத்திப் பேச வேண்டும்? தலைமுறை தலைமுறையாகத் தமிழ் அறிஞர்கள் இந்த இலக்கணத்தை ஒரு வேதம் போலப் போற்றி வந்ததற்குக் காரணம்தான் என்ன?" என்று இந்நாளில் பலரும் நினைக்கக் கூடும். உண்மையில், தொல்காப்பியம் பாஷையின் தன்மையை விளக்கும் இலக்கணம் மாத்திரம் அல்ல: பழைய தமிழர்களுடைய பழகக வழக்கங்களின் சரித்திர இலக்கணமும் இதன் ஒரு பகுதியாக அமைந்திருக்கிறது. இந்தப் பகுதிக்குப் பொருளதிகாரம் என்று பெயர்.

வடமொழியின் பழம் பெருமையையும், இந்து மக்களின் பழம் பெருமையையும் நிலை நாட்டுவது வேதம்; அப்படியே தமிழ் மொழியின் பழம் பெருமையையும் தமிழ் மக்களின் பழம் பெருமையையும் நிலை நாட்டுவது தொல்காபபியம் — என்று சொல்லும் ஆராய்ச்சிக்காரர்களும் உண்டு. ரிக்வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்று வேதத்தை நாலு கூறாக வேத வியாச முனிவர் பிரித்து வைப்பதற்கு முன்பே தொல்காப்பிய முனிவர் தொல்காப்பியம் செய்தார் என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் அபிப்பிராயப்படுகிறார். தொல்காப்பியத்தின் இத்தகைய பழம் பெருமையை ஒப்புக்கொள்ளாதவர்களும், தொல்காப்பியர் பொருளதிகாரத்திலே பிரஸ்தாபிக்கும் தமிழ் நாகரிகத்தின் பழமையையும், பெருமையையும் ஒப்புக் கொள்ளத் தயங்க மாட்டார்கள்.

தொல்காப்பியர் காலத்திலேயே — ஏன்? — தொல்காப்பியருக்கும் முற்பட்ட காலத்திலேயே, வட நாட்டாரும் தென்னாட்டாரும் கலந்து விட்டனர்; அவர்களுடைய நாகரிகங்களும் பழக்க வழக்கங்களும் கலந்துவிட்டன. அந்த நாளில் இபபோது உள்ள எண்ணிறந்த ஜாதி பேதங்கள் இல்லை. தொழில் பற்றியும், இடம் பற்றியும், ஏற்பட்டிருந்த வகுப்பு வித்தியாசங்கள் நாளடைவில் ஜாதி வித்தியாசங்களாக மாறி விட்டன — என்று ஊகிக்கலாம். அந்நாளில் தீண்டாத வகுப்பினரே இல்லையென்றும் சொல்லிவிடலாம்.

காதல் மணம் உண்டா?

"நாகரிக மக்களான வெள்ளைக்காரர்களுக்குள்ளே காதல்-மணம் நடைபெறுகிறது: நமது சமுதாயத்திலோ மணம் செய்து வைக்கிறவர்கள் தாய் தந்தையர், புரோகிதர் தானே? நம் சமுதாயத்தில் இயற்கையான— உண்மையான — காதல் ஏற்பட முடியுமா?" என்றெல்லாம் சீர்திருத்தக்காரர்கள் கவலைப்படுவதைக் கேட்டிருக்கிறோம் அல்லவா? நமது தமிழ் நாட்டில் தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முற்பட்ட காலங்களிலும் காதல் – மணம் நடைபெற்றது. காதலனும் காதலியும் எதிர்பாராதபடி சந்திப்பதும், இருவர் உள்ளமும் ஒருமைப் படுவதும், அவர்கள் மீண்டும் மீண்டும் சந்திப்பதும், காதல் முதிர்ச்சியடைவதும், அந்த முதிர்ச்சியின் பயனாக அவர்கள் மணம் செய்து கொள்வதும் அக்காலத்திலே வழக்கமாக இருந்தன; ஒழுக்கமாகவும் இருந்தன.

தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் இருந்த இலக்கியங்களில் மேலே சொனன காதல் — காட்சிகள் சித்திரிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த இலக்கியச் சித்திரங்களில் உண்மையோடு மனோபாவமும் கலந்திருக்கும். உதாரணமாக, தலைவன் ஒருவன் வேட்டைக்குப் புறப்படுகிறான். ஒரு மலைச் சாரலில் தனியே வருகிறான், தன்னோடு வந்த வேடர்களைப் பிரிந்து. அந்த மலைச்சாரலில் மலை நாட்டுப் பெண் ஒருத்தி தோழிகளோடு விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் தோழிகளைப் பிரிந்து தனியே விளையாடிக் கொண்டிருக்கும் போது, தலைவன் பார்த்து விடுகிறான். அவர்களுக்கிடையே மனம் கலந்த மணம் நிறைவேறுகிறது. காதலனுடைய தோழனும் காதலியின் தோழியும், காதலர்களின் சந்திப்பிற்கு உதவி செய்வார்கள். காதலன் காதலியைப் பிறர் அறியாதபடி அழைத்துக் கொண்டு தன் ஊருக்குப் போவான்.

இப்படி அவர்கள் அந்தரங்கத்திலே செய்து கொள்ளும் மணத்தைக் களவு முறை என்னும், களவொழுக்கம் என்றும் பழைய தமிழ் நூல்கள் கூறுகின்றன. இதை வட நூலார் காந்தர்வ விவாகம் என்று சொல்லுகிறார்கள். பிறகு அந்தக் காதலர்கள் சுற்றத்தாரின் சம்மதம் பெற்றுப் பகிரங்கமாக மணம் செய்து கொள்ளும்போது, அந்த முறை கற்பு என்று சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டார்களின் அநாதியான வாழ்க்கை முறையில் களவும் கற்பும் விவாகத்தின் இரண்டு முக்கிய நிலைகளாகக் கருதப் பட்டன. இவற்றைக் குறித்துத் தொல்காப்பியர் விவரமாகப் பிரஸ்தாபிக்கிறார்.

கூட்டுச் சரக்கு

காந்தர்வம் என்ற களவு மணம் — களவொழுக்கம் — பழைய காலத்தில் ஒழுங்கான மண முறையாகவே யிருந்திருக்க வேண்டும். எனினும் நாகரிகம் வளர வளரப் பொய்களும் தவறுகளும் 'நல்ல மரத்தில் புல்லுருவி போல' வளர்ந்து விடுகின்றன அல்லவா? ஆகவே, மணத்திற்குச் சாட்சியாக நாளடைவில் மணச் சடங்குகளும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

பொய்யும் வழுவும்
தோன்றிய பின்னர்,
ஐயர் யாத்தனர்
கரணம் என்ப

[வழு: தவறு: ஐயர்: அறிஞர்களான மேலோர், முனிவர்கள்; யாத்தனர்: அமைத்தார்கள்; கரணம்: மணச் சடங்கு; என்ப: அசைச் சொல்.]

இந்தச் சிறிய சூத்திரம் சமீப காலத்திலே ஒரு பெரிய யுத்த ரங்கமாகி விட்டது. "ஐயர் யார்? ஆரியரா? திராவிடரா?" என்ற ஆராய்ச்சிகள் கிளம்பி விட்டன. தற்காலத்திலே மூளை குழம்பத் தொண்டை கிழிய ஒற்றுமை சிதையக் கிளம்பி யிருக்கும் ஆரிய-திராவிடச் சண்டைகளைத் தொல்காப்பியர் — பாவம் — கண்டவரா, கேட்டவரா? ஆனால் இதை நினைத்துப் பார்க்க அவகாசம் ஏது, ஆராய்ச்சியைப் போராட்டமாக்கிக் கொண்டவர்களுக்கு?

சுத்தத் தமிழர், சுத்த ஆரியர் என்ற பேதம் தொல்காப்பியர் காலத்தில் கிடையாது. தொல்காப்பியருக்கு முன்பே, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற நாலு வகுப்பினரும் இந்நாட்டில் வாழ்ந்து வந்தார்கள். இந்தப் பிரிவுகள் ஆதியில் தொழில் பற்றி ஏற்பட்டவைதான். இந்த நாலு வகுப்புகளிலும் சில வகுப்புகளை ஆரியர் என்று ஒதுக்கி வைப்பதற்கு ஆதாரமே இல்லை. தமிழ்நாட்டில் இருந்த அரசர்கள் தமிழ் அரசர்கள்; வணிகர்களும் தமிழ் வியாபாரிகள்தானே? அப்படியே தமிழ்நாட்டிலிருந்த அந்தணர்களும் தமிழர்கள்தான்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ் நாகரிகம் ஒரு கூட்டுச் சரக்காக அபிவிருத்தி யடைந்து வந்தது. நாட்டிலுள்ள அறிஞர்கள் இந்த நாகரிகத்தைப் பேணி வளர்த்தார்கள். உதாரணமாக, விவாகத்திற்கும் விவேகம் வேண்டும்என்று கருதினார்கள். எனவே, நாளடைவில் பழைய களவொழுக்கமாகிய காந்தர்வ விவாக முறையைத் திருத்தி அமைத்தார்கள். களவு முறையில் மனம் கலந்த காதலர்கள், தங்கள் ஊரிலே அறிஞர்கள் விதித்த முறைப்படி மணம் புரிந்து இல்லறம் நடத்தினார்கள். அந்தக் கற்பு முறை தான் சடங்கு என்கிறார் தொல்காப்பியர். "கற்பு" என்பதற்கு இந்நாளில் நாம் கொடுக்கும் பொருள் வேறு. இந்த வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளாமலும் தொல்காப்பியப் போராட்டங்கள் அதிகரித்திருக்கின்றன.

ஒருமையும் பெருமையும்

தொல்காப்பியப் பொருளதிகாரத்திலே களவு கற்பு என்ற விஷயங்கள் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியர் தாம் கண்ட இலக்கியங்களையும் தமிழுலகத்திலே தாம் கண்ட பழக்க வழக்கங்களையும் ஆராய்ந்தே பொருளதிகாரம் இயற்றியிருக்கிறார் என்பதில் சந்தேகமேயில்லை. தமிழ் நாகரிகம், ஆரிய நாகரிகம் என்று நமது நாகரிகத்தைப் பிரித்து வைக்கும் விபரீத ஆராய்ச்சியில் தொல்காப்பியர் தலையிடவே யில்லை. தொல்காப்பியம் தமிழர்களின் ஒருமைக்குச் சாட்சியாகவும், பெருமைக்கு நிலைக்களனாகவும் விளங்குகிறது.

தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்பும் உள்ள தமிழ் நாகரிகத்திலே எத்தனையோ நல்ல அம்சங்கள் இருந்தன; சில அநாகரிக அம்சங்களும் இருக்கத்தான் செய்தன! எந்த நாகரிகத்திலே தான் அநாகரிகமும் கலந்து காணப்படவில்லை? கிரேக்க நாகரிகம் முதலான பழைய நாகரிகங்களிலும் அநாகரிக அம்சங்கள் இல்லையா? நவ நாகரிகத்திலும் எவ்வளவு அநாகரிகம் கலந்திருக்கிறது! அநாகரிகக் களை பிடுங்கி நாகரிகப் பயிரை வளர்ப்பது

நல்லறிஞர் கடமை. இத்தகைய அறிஞர்கள் தொல்காப்பியர் காலத்திலும் இருந்தார்கள்; அவருக்கு முன்பும் இருந்தார்கள். அவர்கள் தங்கள் விவேகத்தை விவாகத் துறையில் மட்டும் அல்ல; மற்ற வாழ்க்கைத் துறைகளிலும் செலுத்தினார்கள். அவர்கள் தமிழ் நாகரிகத்தைச் சீர்திருத்தி — அதாவது சீர்பெறும்படி திருத்தி — வளர்த்து வந்தார்கள். அவர்களைத்தான் தொல்காப்பியர் "ஐயர்" என்று குறிப்பிடுகிறார். அப்பெரியோர்களை முனிவர்கள் என்று சொல்வதும் உண்டு.

பல அறிஞர்களுடைய முயற்சியினால் தமிழர்களுடைய பொது நன்மைக்காக எத்தனையோ நல்ல பழக்கங்கள் சீர்திருத்தங்கள் நமது நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பழக்க வழக்கங்கள் எல்லாம் சேர்ந்தது தான் தமிழ் நாகரிகம். தமிழ் நாகரிகத்தையும் தமிழ் மொழியையும் திருத்தி வளர்த்த முனிவர்களில் தொல்காப்பியருக்கும் ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. பழைய தமிழ் நாகரிகத்தின் ஒரு மூல பொக்கிஷமென்று தொல்காப்பியத்தைக் கருதலாம்.

இப்படிப்பட்ட பொக்கிஷ சாலையைப் போர்க்களமாக்கி விடாமல் ஆராய்ந்து பார்த்தால், தமிழ் நாகரிகம் காதலாலும் வீரத்தாலும் வளர்க்கப்பட்டதுபோல், அறிவுக் காதலாலும் வளர்க்கப்பட்ட அரும் பொருள் என்று தெரிய வரும்.



உபாத்தியாயர்:—அடே, ஏன் உலகப் படத்தைத் திருப்பி மாட்டியிருக்கிறாய்?

ராமு:—இல்லை ஸார். நீங்கள்தான் அன்றைக்குச் சொன்னீர்களே, உலகமே திரும்பிப் போயிருக்கிறதென்று?

ஒரு நிமிஷக் கதை

அனுப்பின ஆசாமி

ஒரு நாள் சாயங்காலம் ஒரு மனிதர் இரத்தினம் செட்டியார் ஜவுளிக் கடைக்கு வந்து, "உங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் சுந்தர முதலியார் என்னை உங்களிடம் அனுப்பினார்" என்றார்.

வந்திருந்த மனிதனைப் பார்த்தவுடன் செட்டியாருக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. தம் கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டு, அவன் காதோடு "பார்த்தாயா, எதிரே உட்கார்ந்திருக்கும் மனிதரை? படாடோபமில்லாமல் எவ்வளவு அடக்கமாயிருக்கிறார்! ராவ்ஸாகிப் சுந்தர முதலியாரிடம் ஒரு நல்ல பாகஸ்தரைச் சிபார்சு செய்யும்படி சொல்லியிருந்தேன். அவர்தான் இவரை அனுப்பியிருக்கிறார்" என்று சொல்லிவிட்டு அந்தப் புதிய மனிதரைக் கூப்பிட்டுத் தன் கடையிலுள்ள ஜவுளிகளைக் காண்பிக்க ஆரம்பித்தார்.

முதல் பீரோவிடம் வந்தவுடன் செட்டியார் புதிதாக வந்த ஜரிகை வேஷ்டிகளைக் காண்பித்து "இதுமாதிரி வேஷ்டிகள் தங்களிடம் உண்டா?" என்று கேட்டார். "இந்த வேஷ்டிகள் என்ன பிரமாதம்? இதைவிட அகலமுள்ள ஜரிகை வேஷ்டிகள் என்ன, ஜரிகைப் புடவைகள் என்ன, எல்லாம் என்னிடம் உண்டு" என்று வந்தவர் பதில் சொன்னார். "அப்படியா?" என்று ஆச்சரியப்பட்டார் செட்டியார். "சாதாரணமாகப் புதியதாக வந்த துணிகள் தங்களிடம் எவ்வளவு நாள் தங்கும்?" என்று வினவினார் கடைக்காரர். அதற்கு வந்தவர் "ஒரு வாரம் அல்லது பத்து நாளைக்கு மேல் என்னிடம் இருக்காது" என்றார்.

"உங்களுடைய வீடு எந்த வீதியில் இருக்கிறதோ?" என்று செட்டியார் கேட்டதும், புதிய மனிதர், "செட்டியார்வாள்! என் மீது நீங்கள் அவநம்பிக்கை கொள்ள வேண்டாம். இவ்வூரிலுள்ள பல பிரமுகர்களை எனக்குத் தெரியும்!" என்றார். அதற்குச் செட்டியார் "தங்கள் வீட்டைப் பார்க்க வேண்டுமென்றுதான் வருகிறேன்; வேறு ஒன்றும் வித்தியாசமாக எண்ணாதீர்கள்" என்று சொல்லிக்கொண்டே அந்த மனிதருடைய வீட்டுக்குக் கிளம்பினார்.

இருவரும் வீட்டுக்குச் சமீபத்தில் வந்து விட்டனர். இருட்டில் செட்டியார் எதன் மீதோ இடறிக் கீழே விழுந்தார். "செட்டியார்வாள், ஜாக்கிரதை! வாசற்படியில் கழுதை கட்டியிருக்கிறது" என்று சொல்லவே செட்டியாருக்குத் தூக்கி வாரிப் போட்டது. "கழுதையா?" என்று திகிலுடன் கேட்டார் செட்டியார்.

"என்ன செட்டியார்வாள், ஒன்றும் தெரியாதவர் போலப் பேசுகின்றீர்களே! எங்கள் தொழிலுக்குக் கழுதையும் சாலும் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?" என்றார் அந்த ஆசாமி. இதைக் கேட்டதும் செட்டியாருக்கு மயக்கம் வருவது போலிருந்தது. சுந்தர முதலியாரிடம் ஒரு நல்ல வண்ணானை அனுப்பும்படி சொன்னது அவருக்கு அப்பொழுது தான் ஞாபகம் வந்தது!

—என். நடேசன்.

வட்ட மேஜை

கல்கி அன்பர் சங்கம்
மைசூர்
3—6—43

கல்கி ஆரம்பித்ததிலிருந்து (முதலிதழ் தவிர)ப் படித்து மகிழ்பவர்களில் நானுமொருவன். இங்கு நம் தமிழ் நாட்டினின்று வெளியேறிக் கல்வி பயிலும் மற்றும் பலர் கல்கியைப் படித்து மகிழ்ந்து வருகிறார்கள். அவர்களும் நானும் ஒன்று சேர்ந்து ஒரு சங்கத்தை அமைத்தோம். அதற்கு "கல்கி அன்பர் சங்கம்" என்று ஒரு முகமாகப் பெயர் வைக்கப்பட்டது. இச் சங்கம் தமிழ்த் தாய்க்குத் தொண்டு புரியுமென நம்புகிறேன். தமிழ் படிக்கத் தெரியாத என் நண்பர்கள் கல்கியைப் படிக்கச் சொல்லிக் கேட்டுக் களிப்புற்றவர்களாய்த் தமிழைக் கற்றுக்கொள்ள ஆர்வங் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு சில நாட்களாகக் "கன்னட ஹரிச்சந்திரா" ஓடி வருகிறது. அதைக் கண்டு களித்த பலர் தாங்கள் இவ்விதழில் அதைப் பற்றி எழுதிய விமர்சனத்தை மிக்க அன்புடன் வரவேற்கிறார்கள். தாங்கள் உயர்ந்த நோக்கத்துடன் பட்சபாதமின்றிக் கலைகளுக்கு ஆதரவு காட்டுவதையும், சிக்கலான நம் இந்திய அரசியலில் அவ்வப்போது வெளியிடும் அரிய யோசனைகளையும் கண்டு எவர் இதயம்தான் பூரிக்காமலிருக்கும்?

ப. வெ. ராஜகோபாலன்.

["அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால், இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே!" —ஆசிரியர்]

நாகூர்
1—6—43

இன்றைய "கல்கி"யில் "கொன்று விட்டார்கள்!" என்ற தலையங்கத்தை வாசித்ததும் நான் மிக்க சந்தோஷமடைந்தேன். ஜனாப் ஜின்னா இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஒரு சிறிய துரும்பைக் கூடத் தூக்கிப் போடமாட்டார் என்பதைப் பற்றி எனக்கு எக்காலத்திலும் சந்தேகமே யில்லை. வேண்டுமானால், இந்தியாவின் சுதந்திரப் பாதையில் முட்டுக் கட்டைகள் போடுவதற் சர்ச்சில்களும், அமெரிகளும் தவறினாலும், ஜனாப் ஜின்னா சாயபு நிச்சயமாகத் தவறவே மாட்டார். குருட்டல்களால் அகப்பட்டதைச் சுருட்டப் பார்ப்பதே அவருடைய சுபாவம். அவர் புத்தி நேரான பாதையிலிருந்து விலகி நெடுநாட்களாய் விட்டது. அவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால்தான் இந்தியாவின் சுதந்திரத்தைப் பெறமுடியுமென்று கூறுவது அலை ஓய்ந்த பிறகுதான் சமுத்திரத்தில் ஸ்நானம் செய்ய முடியுமென்று சொல்வதைப் போன்றதுதான். மாசற்ற மகாத்மாவுக்குக் களங்கம் கற்பிக்கும் ஒருவரிடமிருந்து நேர்மையையும் சத்தியத்தையும் எதிர்பார்ப்பது குதிரைக் கொம்பைக் காண முயலுவதுதான். அமெரியோடும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடும் போராடுவதோடு, ஜனாப் ஜின்னாவோடும், அவருடைய அக்கிரம எதேச்சாதிகாரத்தோடும் போரிடுவதுதான் இனி இந்திய தேசிய வாதிகளின் கடமையாகும். இதைத் தாங்கள் இப்போதாவது உணர்ந்ததற்கு மிக்க வந்தனம்.

எம். எம். இஸ்மாயில்.

[நாம் புதிதாக ஒன்றும் உணரவில்லை; உணர வேண்டியது மில்லை. தயவு செய்து "கல்கி" பழைய இதழ்களைப் பார்க்கவும். ஜனாப் ஜின்னாவின் முட்டுக்கட்டை பலத்தை வளர்க்க வேண்டாமென்றுதான் ஆதி முதல் நாம் சொல்லி வந்தோம். அந்த பலம் இப்போது ஒன்றுக்குப் பத்தாக வளர்ந்து விட்டது! இதற்குக் காரணமானவர்கள்தான் இப்போது உண்மையை உணர வேண்டிய அவசியம் அதிகமாகியிருக்கிறது. —ஆசிரியர்]

கல்கத்தா
31—5—43

மே 26-உ புதன் கிழமை கல்கத்தா "நியூ எம்பயர் தியேட்டர்" முன் ஏராளமான ஜனத்திரள். இந்தக் கூட்டத்திற்குக் காரணம், அன்று "ராய்த் மிகல்" ஸ்கூல் நிதிக்காக பிரபல நாட்டிய ஆசிரியர் ஸ்ரீ திமிர்பரனின் கோஷ்டியார் நடத்திய நாட்டியக் கச்சேரியில், குமாரி சரஸ்வதி சாஸ்திரியின் நடனம் ஏற்பாடு செய்திருந்ததே என்று தெரிய வந்தது.

குமாரி சரஸ்வதி, தமிழ் இசைப்பற்றுள்ள ஸ்ரீ ஆர். வி. சாஸ்திரி தம்பதிகளின் புதல்வி; அல்மோராவில் உதய சங்கரின் கலாநிலயத்தில் நாட்டியக் கலை பயின்றவர்.

அன்று குமாரி சரஸ்வதியின் நடனத்தின் ஒவ்வொரு அம்சமும் மனதைக் கவர்ந்து திருத்தும்படியாக இருந்தது. அதற்கேற்றப்போல் வாத்திய கோஷ்டியும் நன்கு அமைந்திருந்தது.



ஒரு காதல் காட்சியை உண்மை பாவத்தோடு நடனமாடி, முகத்தின் மூலமாக அந்த அந்த பாவத்தை அப்படி அப்படியே தெளிவாய் வியாக்யானம் செய்து காட்டி, எல்லோரையும் ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தி, நடனக் கலைக்கே உயிர் கொடுத்தார் என்றே சொல்ல வேண்டும்.

வங்காளிகளும், குஜராத்திகளும், மார்வாரிகளும், ஐரோப்பியர்களும் ஏனைய பல வகுப்பாரும் "அற்புதம்" "ஆச்சரியம்" என்று சொல்லும்படியாகச் செய்து விட்டார். இது நமது தமிழ் நாட்டுக்கே ஒரு பெருமையாகும்.

பொ. சுப்பையாப் பிள்ளை.

["திறமான புலமை எனில் வெளி நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்னும் பாரதியார் விருப்பம் குமாரி சரஸ்வதியினால் நிறைவேறி வருவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். —ஆசிரியர்]



ஆனந்தமாக லிப்டன் தேனீர் அருந்தும்போது பொறுப்பற்ற பேச்சுக்களைப் பேசாதீர்கள்.

★ மரத்தில் ஒரே ஒரு இலை மட்டும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதுவும் விழுந்து விட்டால் ....?

துளிர்த்த உயிர்

"ராஜ்"

● "லக்ஷ்மி! இந்தச் சித்திரத்தைப் பார்த்தாயா? எவ்வளவு அழகாகச் சித்திரசேனன் இதை வரைந்திருக்கிறான்!" என்று கூறிக்கொண்டே ராஜராஜன் லக்ஷ்மி தேவியின் பக்கம் திரும்பினான். லக்ஷ்மிதேவி அப்பொழுது தும்ம ஆரம்பித்தாள். அந்தத் தும்மலை ராஜராஜன் கவனிக்க வேண்டியதாயிற்று. ஏனென்றால் லக்ஷ்மி மேலும் மேலும் அடுக்கிய வண்ணமாகவே தும்மிக் கொண்டிருந்தாள்.

"உனக்கு ஜலதோஷம் பிடித்திருக்கிறாப்போலே இருக்கே. நந்தவனத்தில் பனியில் வெகு நேரம் உலாவி இருப்பாய்" என்று ராஜராஜன் கூறிவிட்டு மறுபடியும் சித்திரத்தில் ஆழ்ந்து விட்டான்.

ராஜகுமாரியைப் பிடித்த ஜலதோஷம் சாதாரண ஜலதோஷத்துடன் போகவில்லை. அது கொஞ்ச சுரமாக வந்து, பெரிய சுரமாகி, ராஜகுமாரியைப் படுத்த படுக்கையாக வைத்து விட்டது. .

2

● காலை வேளை. லக்ஷ்மி சிறிது கண்ணைத் திறந்தாள். அவள் பக்கத்தில் ராஜராஜன் கவலையுடன் உட்கார்ந்திருந்தான்.

"வைத்தியர் என்ன சொன்னார்?" என்று லக்ஷ்மிதேவி கேட்டாள்.

"ஒன்றுமில்லை, பயப்பட வேண்டாம் என்று சொன்னார்."

"தெரியும் எனக்கு. வைத்தியர் உங்களிடம் கூறினதை நான் கேட்டேன். பத்து நாள் கெடு வைத்திருக்கிறார் அல்லவா? ஐந்து நாள் போய்விட்டது. இலையிலும் ஐந்து விழுந்து விட்டது!" என்றாள் லக்ஷ்மி.

"லக்ஷ்மி! நீ கூறுவது எனக்கு ஒன்றும் புரியவில்லையே! என்னமோ உளறுகிறாயே."

"நான் சரியாகத்தான் நாளை எண்ணிக் கொண்டிருக்கிறேன். வேறொன்றுமில்லை. இங்கே வாருங்கள், என பக்கத்தில் உட்காருங்கள். அப்படிச் சாளரத்துக்கு வெளியில் பாருங்கள்" என்றாள் லக்ஷ்மி.

"அங்கே என்ன இருக்கிறது? நானும் இப்பொழுது கவனித்தேன்; — நீ அங்கே அடிக்கடி பார்ப்பதும், ஏதோ விரல் விட்டு எண்ணுவதுமாகவே இருக்கிறாயே. இது என்ன பைத்தியம்!"

"பைத்தியமா? உங்களுக்கு அங்கே ஒன்றும் தெரியவில்லையா?"

"அங்கே ஒரு மரமிருக்கிறது."

"அதில் எவ்வளவு இலை இருக்கிறது பார்த்தீர்களா? ஐந்தே ஐந்து. நான் உடம்பு சரியாக இல்லாமல் படுத்துக் கொள்ளும்பொழுது எவ்வளவு இலைகள் இருந்தன! மட மடவென்று எல்லா இலைகளும் உதிர்ந்து விட்டன! ஐந்தே இலைகள் பாக்கி; என் வாழ்வும் இவ்வுலகில் ஐந்தே நாட்கள்தான். பாக்கியுள்ள இலைகள் ஒவ்வொன்றாக விழுந்ததும் என் உயிரும் போய்விடும்."

"அட அசடே! இவ்வளவு நாளாக என்னிடம் சொல்லாமலே என்னத்தையோ மனதில் வைத்துக்கொண்டு நாள் கணக்குப் பண்ணுகிறாயே. இது இலையுதிர் காலமல்லவா? உன் உடம்பிற்கும் இலை உதிர்வதற்கும் என்ன சம்பந்தம்?" என்று ராஜராஜன் பல விதமாகச் சமாதானம் கூறினான்.

3

● மரத்தில் ஓர் இலை மட்டும் ஒட்டிக் கொண்டிருந்தது. ராஜராஜன் அதைப் பார்த்ததும் லக்ஷ்மியின் வாக்கு நிஜமாகி விடுமோ என்று பயப்பட்டான். ஏதாவது ஒரு சக்தி அந்த இலையை விழாமல் செய்து விடாதா என்று நினைத்துக் கொண்டே லக்ஷ்மியை நோக்கினான். அவள் முகம் வெளுத்திருந்தது; ராஜராஜனைப் பார்த்து ஒரு சிறு புன்னகை புரிந்தாள். விரலால் ஏதோ சைகை செய்தாள். அதே சமயத்தில் தன்னைத்தான் ராஜகுமாரி சைகை செய்து கூப்பிடுகிறாள் என்று நினைத்த வண்ணம் சித்திர சேனன் உள்ளே நுழைந்தான். அங்கு ராஜகுமாரனையும் ராஜகுமாரியையும் பார்த்து மனம் கலங்கினான்.

"ஏன் வருத்தமாயிருக்கிறீர்கள்? வைத்தியர்கள்தான் பயமில்லை என்கிறார்களே" என்றான் சித்திரசேனன்.

"அவர்கள் என்ன சொன்னால் என்ன? அவர்களால் லக்ஷ்மியின் மனோ வியாதிக்கு மருந்து கொடுக்க முடிய வில்லையே!" என்று லக்ஷ்மியின் மனப் பிராந்தியைப் பற்றி ராஜராஜன் கூறினான்.

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந் தான் சித்ரசேனன். பிறகு "யுவராஜா! கவலைப்பட்டுப் பயனில்லை. மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறி விட்டுச் சென்றான்.

● காலை நேரம்; ராஜராஜன் தன் அருமை மனைவியின் பக்கத்தில் இருந் தான். மெதுவாகக் கண் விழித்தாள் லக்ஷ்மி. "ஜன்னல் கதவைத் திறவுங்கள்; நான் பார்க்கப் போகிறேன்" என்றாள். கதவும் திறக்கப்பட்டது. என்ன ஆச்ச ரியம்! அந்த ஒரே இலை, மஞ்சள் நிறத் துடன் கூடிய ஒரே பழுப்பு இலை, மரத்தைவிட்டு அகலாமல் அங்கேயே இருந்தது! உடனே ராஜ குமாரியின் மனதில் ஒரு மாறுதல் ஏற்பட்டது.

"என்ன மூடத்தனம்? அந்த இலை விழுந்து விடும் என்று நினைத்தேனே! தெய்வச் செயல் எப்படி யிருக்கிறது பார்த்தீர்களா? நான் உங்களுக்குக் கொடுமை இழைத்து விட்டேன். இறந்து விடவேண்டும் என்று நினைப்பது மகா பாவம். உங்கள் கையால் பால் கொடுங்கள்! சாப்பிடுகிறேன்!" என்று குழந்தைபோல் கூறினாள்.

4

● அரண்மனையில் என்றுமில்லாத சந் தோஷம்; குதூகலம். லக்ஷ்மி வர வரக் குணமடைந்து நடக்கும் நிலைமையை அடைந்தாள். ராஜராஜனும் லக்ஷ்மி யும் தங்கள் அறையில உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சித்திரசேவன் உள்ளே நுழைந்தான்.

"லக்ஷ்மி, உன்னைக் காப்பாற்றியது வைத்தியர்களல்ல; உன் உயிரைத் தளிர்க்க வைத்த இலையை உண்டாக்கி யது யார் தெரியுமா?" என்று கேட் டான் ராஜராஜன்.

லக்ஷ்மி ஆச்சரியத்துடன் அந்தப் பட்ட மரத்தின் அருகில் போய்ப் பார்த்தாள். சித்திரசேனன் கைத் திறத்தால் அமைந்த அந்த இலைக்கும் பகவானுடைய சிருஷ்டியினால் அமைந்த மற்ற இலைகளுக்கும் என்ன வித்தி யாசம் என்று தெரியாமல் ஸ்தம்பித்து நின்றாள்.

★ இந்த அத்தியாயத்தில் காமெடியன் பஞ்சு கல்லைத் தூக்கிப் போடுகிறான்! நல்ல வேளையாக, யாருடைய தலையிலும் போடவில்லை; ஒரு கடிதத்தின் தலையிலே தான் போடுகிறான்! அதனுடைய பலாபலன்கள் என்ன?........நல்லது, கதாசிரியரே சொல்லட்டும்!

உடைந்த வளையல்

தொடர்கதை

— து.ரா. —

பதினாறாம் அத்தியாயம்
பஞ்சுவின் கடிதம்

நான்கைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு தினம் தங்கமணி ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வந்ததும் நேராகச் சுசீலாவின் அறைக்குச் சென்றான். அவளுக்கு ஜுரம் ஆரம்பித்துப் பத்து நாள் ஆகிவிட்டது. ஆனால் இன்னும் ஜுரம் சற்றும் குறையவில்லை. டாக்டர் இரத்தத்தைப் பரீட்சை பண்ணிப் பார்த்து விஷ ஜுரம் என்று கூறிவிட்டார்.

சுசீலா முன்போல் கட்டிலில்தான் படுத்திருந்தாள். அதற்குள் அவள் தேகம் மெலிந்து முகம் வெளுத்துக் காணப்பட்டது. சுசீலாவின் கால்மாட்டில் ஒரு நாற்காலியில் மதுரம் உட்கார்ந்திருந்தாள். தான் உள்ளே நுழைந்ததும் மரியாதைக்காக எழுந்து அவளை உட்காரும்படி கையமர்த்தி விட்டு, தங்கமணி தூங்கிக் கொண்டிருந்த தன் மனைவியின் முகத்தைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றான். பிறகு சுவரில் மாட்டியிருந்த 'டெம்பரேசர் சார்ட்டை'ப் பார்த்தான். பகல் மூன்று மணிக்கு 104·6 என்று போட்டிருந்ததைப் பார்த்ததும் உதட்டைக் கடித்துக் கொண்டு சுசீலாவின் கன்னத்தில் கை வைத்துப் பார்த்தான். உடனே அவள் கண்ணைத் திறந்து அவனைப் பார்த்துச் சிரிக்க முயன்றாள். "தூங்கு" என்று அவன் சொன்னதும் "எப்பொழுது வந்தீர்கள்? காப்பி சாப்பிட்டீர்களா?" என்று ஈன ஸ்வரத்தில் கேட்டாள்.

"இப்பொழுதுதான் வந்தேன். ஹோட்டலில் காப்பி சாப்பிட்டாய் விட்டது" என்றான்.

"மதுரம்! நீ காப்பி வைத்திருக்கவில்லையா?" என்று சுசீலா கேட்டாள்.

"வைத்திருக்கிறேன், அக்கா!" என்று மதுரம் எழுந்திருந்தாள்.

"வேண்டாம், இருக்கட்டும். வரும்போதுதான் சாப்பிட்டு விட்டு வந்தேன்" என்றான் தங்கமணி.

தன் அறைக்குள் சென்று கோட்டைக் கழற்றிவைத்து விட்டு அவன் மறுபடியும் சுசீலாவின் அறைக்கு வந்தபோது மதுரம் அங்கில்லை. அரை மணி நேரத்திற்குப் பிறகு டாக்டர் வந்து பார்த்து மருந்து எழுதிக் கொடுத்து விட்டுப் போனபின் சுசீலா, "மதுரம் எங்கே?" என்று கேட்டாள்.

தங்கமணிக்கும் அது தெரியாதபடியால் "சமையல் அறையில் இருப்பாள்" என்று கூறினான். சுசீலா அவளைப் பற்றிக் கேட்டபிறகுதான் அவனுக்கும் அவள் ஞாபகம் வந்தது. உள்ளே காரியமாக இருந்தாலும் நிமிஷத்துக்கு ஒருதரம் அவள் சுசீலாவை வந்து பார்க்காமல் இருக்க மாட்டாள். அதுவும் டாக்டர் வந்தால், அவர் போகிற வரையில் பக்கத்திலேயே அவள் இருப்பது வழக்கம். அவர் என்ன சொல்வாரோ என்று அறிந்து கொள்ள அவளுக்கு அவ்வளவு ஆவல் இருந்தது. ஆனால் இன்று டாக்டர் வந்தபோது கூட அவள் அங்கே வராதது தங்கமணிக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணிற்று. சிறிது நேரம் இதைக் குறித்து யோசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது சுசீலா கண்ணை மூடிக்

கொண்டு தூங்குவது போல் இருந்தபடியால், மதுரம் என்னதான் பண்ணுகிருள் பார்க்கலாம் என்று எழுந்திருந்து சமையலறையை நோக்கிச் சென்ருன்.

மதுரம் அவள் அறையில் இல்லை. சமையலறையை அடுத்தாற் போலிருந்த சாப்பாட்டு உள்ளில் அவள் இருந்தாள். அவளைப் பார்த்ததும் தங்கமணி வாசற்படியிலேயே திடுக்கிட்டு நின்ருன்.

அவள் ஜன்னல் எதிரில் நின்று கொண்டு தோட்டத்தை நோக்கிக் கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கன்னத்தின் மேல் வழிந்து கொண்டிருந்தது.

தங்கமணி நடந்து வந்த சத்தம் அவள் காதில் விழவில்லை. அதனுல் அவன் வந்து நின்ற பிறகும்கூடத் திரும்பிப் பாராமலே அசையாமல் நின்ருள். அவளே பலமாக மூச்சு விடவும் பயந்து கொண்டு ஒன்றும் புரியாமல் சிறிது நேரம் நின்றபின் "என்ன இது?" என்று மெதுவாக வினவினுன்.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. உடனே சத்தம் வந்த பக்கம் முகத்தைத் திருப்பி யாரென்று பார்த்து விட்டு அடுத்த விநாடி கலவரத்துடன் சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டு சமையலறைக்குள் செல்ல முயன்ருள்.

அப்பொழுது தங்கமணி "இதோ பார்—மதுரம்! இங்கே வா" என்ருன்.

முதல் முறையாக அவளை அவன் இன்றுதான் பெயரைச் சொல்லி அழைத்தான்.

அதைக் கேட்டு மின்சாரம் பாய்ந்தது போல் அவள் உடல் சிலிர்த்தது. பயத்தால் மேலே நடந்து செல்ல அவள் கால்கள் எழும்பவில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டு அவன் எதிரில் கவிழ்ந்த தலையுடன் நின்ருள்.

"என்ன இது? எதற்காக இப்படி அழுகிருய்?" என்று கேட்டான்.

குனிந்த தலை நிமிராமல் சற்று நேரம் நின்றபின் தலையை உயர்த்தி அவனை நோக்கினுள் மதுரம். அவள் அடக்க முயன்ற அழுகை மறுபடியும் பொருமிக் கொண்டு வந்து விடும்போல் இருந்தது. அவள் உதடுகள் துடித்தன. அழுகையை விழுங்க முயன்றும் முடியாமல் மறுபடியும் கண்களில் நீர் சுரந்தது. தங்கமணிக்கு ஒன்றும் விளங்காமல், "என்ன இது? எதற்காக அம்மா இப்படி அழுகிருய்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்று அவள் பதிலளித்தாள்.

"ஒன்றுமில்லையா? ஒன்றுமில்லாததற்கு யாராவது இப்படி அழுவார்களா? நீ பொய் சொல்லுகிருய்!" என்ருன்.

"இல்லை; நிஜம்தான்—"

"ஒன்றுமில்லையாவது? என்ன நடந்தது? சொல்லு."

"ஒன்றும் நடக்கவில்லை."

"பின் எதற்காக அம்மா அழுகிருய்?"

உண்மையை மறைக்க முயல்வதில் பயனில்லை என்று கண்டு கொண்டு அவள் தன் இடது கையை எதிரே நீட்டி மூடியிருந்த விரல்களைத் திறந்தாள். அந்தக் கைக்குள் இதுவரையில் அவள் மூடி வைத்திருந்த கசங்கிப் போயிருந்த காகிதத்தைத் தங்கமணி வாங்கினுன். அதைப் பிரித்து அதில் எழுதியிருப்பதைப் படித்தபோது அவன் கரம் நடுங்கிற்று. "இது என்ன இது? யார் இவன்?" என்ற வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டன.

"பட்டுவின் மாமா" என்ருள் மதுரம்.

தங்கமணிக்கு முதலில் ஆச்சரியமும் அவநம்பிக்கையும் உண்டாயின. பிறகு சிரித்துக் கொண்டு "அடேயப்பா! எவனே உதவாக்கரை எழுதியதற்காகவா இப்படி அழுகிருய்? இது எப்படி உன்னிடம் வந்தது?" என்று கேட்டான்.

"ஜலம் கொண்டுவரப் போனேன். தினம் போகிறேனே இல்லையோ சாயங்காலம், அந்த மாதிரி இன்றும் போனேன். நாலைந்து நாளாகவே அந்த நேரத்தில் அவன் கிணற்றங் கரைப் பக்கம் சுற்றிக் கொண்டிருப்பது வழக்கம். நான் பார்க்காதது போல் வந்து விடுவேன். இன்றும் வழக்கம் போல் வந்திருந்தான். நான் வருவதைப் பார்த்ததும் அந்தக் காகிதத்தைக் கிணற்றின் மேல் வைத்து அது பறந்து போகாமல் இருக்க ஒரு கல்லையும் அதன்மேல் வைத்து விட்டு வேகமாய்ப் போனுன். நான் அது என்ன வாய்த்தான் இருக்கும் என்று பார்க்கலாம் என்று எடுத்து வந்தேன்.

இந்த மாதிரி எழுதி யிருக்குமென்று நினைக்கவில்லை."

தங்கமணி உதட்டைக் கடித்துக் கொண்டு, "நாளையிலிருந்து நீ அந்தக் கிணற்றங்கரைக்குப் போக வேண்டாம். காசு கொடுத்தால் யாராவது தண்ணீர் கொண்டு வந்து தருகிறார்கள். முன்னமே, அவன்மேல் சந்தேகம் உண்டானதுமே என்னிடம் சொல்லுகிறது தானே நீ?" என்று கேட்டான்.

ஒரு நிமிஷம் அவள் பேசாமல் இருந்து பிறகு, "அவன் பட்டு ஆத்து மனுஷன். அவாளை எல்லாம் பற்றி நான் புகார் சொல்லலாமா? சொன்னால் நம்புவார்களா?" என்றாள்.

அவன் அவளைச் சமாதானப்படுத்தி விட்டுத் தன் அறைக்குச் செல்லும் பொழுது அவள் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவை என்பதை நினைத்துத் தங்கமணி ஆச்சரியப்பட்டான். பஞ்சு இந்த மாதிரி பண்ணுகிறான் என்று அவள் உடனே புகார் பண்ணி யிருந்தால் ராஜம்மாள் லேசில் விடுவாளா? "இந்தப் பெண் குணம் கெட்டது. அதனால்தான் மற்றவர்களைக் குற்றம் சொல்கிறது" என்று அவள் தலையிலேயே பழியைச் சுமத்த மாட்டாளா?



அந்த விரலுக்கு மேல் கயிற்றைக் கெட்டியாகக் கட்டி.........

மறுபடியும் சாவகாசமாய் அந்தக் கடிதத்தைப் படித்தான் தங்கமணி. காமெடியன் பஞ்சு அதில் ஒரு காதல் கதையே எழுதி யிருந்தான்.

மதுரத்தை முதல்முறை பார்த்ததுமே அவன் அவளிடம் காதல் கொண்டு விட்டானாம்! அதற்கப்புறம் பாவம், அவனுக்கு அன்ன ஆகாரம் கிடையாதாம்; ராத்திரியில் தூக்கம் பிடிப்பதில்லையாம். இன்னும் என்னென்னவோ கோளாறுகளும் ஏற்பட்டு விட்டனவாம். எல்லாவற்றுக்கும் மருந்து அவள்தானாம்! அவள் சம்மதப்பட்டுத் தன்னுடன் வருவதாயிருந்தால் இரண்டு பேரும் பம்பாய்க்குப் போய்விடலாம் என்றும், அங்கே ஸினிமாவில் சேர்ந்து கொண்டு சொர்க்க லோக வாழ்க்கையையே அனுபவிக்கலாமென்றும் அவன் எழுதி யிருந்தான்.

இதையெல்லாம் படித்தபோது தங்கமணிக்கு அவ்வளவு கோபம் வரவில்லை; சிரிப்புத்தான் வந்தது. ஆனால் அதற்குப் பிறகு பஞ்சு எழுதி யிருந்த அவதூறைப் படித்த போது தான் அவன் உடல் பதறிற்று.

"ஏற்கனவே கல்யாணமானவனுடன், இப்படி நீ வாழ்க்கை நடத்துவதில் என்ன பிரயோஜனம்? ஊரெல்லாம் இந்த சமாசாரம் தெரிந்து சிரிப்பாய்ச் சிரிக்கிறதே. சுசீலாவுக்கு இன்னும் இது தெரியவில்லை. தெரிந்து விட்டால் அவள் சும்மா இருப்பாளா? ஆகவே என்னுடன் வந்து விடுவதுதான் நல்லது—" என்று எழுதி யிருந்தது.

கடிகாரம் டங் என்று ஒரு தரம் அடித்தது. தங்கமணி காகிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து ஜன்னலுக்கு வெளியே எறிந்து விட்டு யோசனையில் ஆழ்ந்தவனாய் நின்றான்.

பிறகு அவன் மறுபடியும் சமையலறைக்குச் சென்று "மதுரம்! எங்கே, காப்பி வைத்திருக்கிறேன் என்றாயே; கொடு சாப்பிடுகிறேன்" என்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டு விட்டுப் போனான்.

பதினேழாம் அத்தியாயம்
தேன் கொட்டிற்று

அன்று விநாயக சதுர்த்தி. ஹாலில், தங்கமணி பூஜை பண்ணிக் கொண்டிருந்தான். சுசீலாவும் மதுரமும் சமையலறையில் இருந்தார்கள். திடீரென்று மதுரம் கையைப் பிடித்துக் கொண்டு, "ஐயோ, தேன் கொட்டிவிட்டது, அக்கா!" என்றாள்.

சுசீலாவுக்குத் தேன் என்றால் நடுக்கம்! "தேனா? ஐயையோ, எங்கே?" என்று கத்திக் கொண்டு அவள் கையிலிருந்ததை அப்படியே போட்டு விட்டு, சமையலறையை விட்டு வெளியே ஓடி வந்து விட்டாள். அவள் கூச்சலைக் கேட்டு எழுந்து வந்த தங்கமணி சமையலறையிலிருந்த தேனைக் கண்டு பிடித்து அடித்துவிட்டு மதுரத்தைப் பார்த்தான். "எங்கே கொட்டி விட்டது?" என்று அவன் கேட்டதும் அவள் விரலைக் காட்டவே, துடித்துக் கொண்டிருந்த அந்த விரலின் நுனி செக்கச் செவேலென்று சிவந்து போயிருந்ததைப் பார்த்தான். உடனே ஒரு கயிறு எடுத்து, அவள் கையைப் பிடித்துக்கொண்டு அந்த விரலுக்கு மேல் கயிற்றைக் கெட்டியாகக் கட்டி, தேன் கொட்டின இடத்தை ஊசியினால் கீறி, இரத்தத்தை எடுத்து விட்டு என்னவோ மருந்து போட்டான்.

இவ்வளவு தான் நடந்தது. சுசீலா கண்ணைக் கொட்டாமல் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். தங்கமணி மதுரத்தின் கையைப் பிடித்த பொழுது அவள் மனதில் சொரேல் என்றது. உடனே, "ஆபத்து சமயத்தில் இதெல்லாம் பார்ககலாமா? டாக்டர் வைத்தியம் பண்ண வருகிறாரே. நம் கையைப் பிடித்துப் பார்க்காமலா வைத்தியம் பண்ணுகிறார்?" — என்று நினைத்தான். இருந்தாலும் தன் கணவன் டாக்டரா? —

தன் மனதில் தோன்றிய எண்ணங்களை வெளிக் காட்டிக்கொள்ள அவளுக்கு இஷ்டமில்லை. எங்கே வெளிக்குத் தெரிந்து விடுமோ என்று பயம் கூட. அதனால் ஏகமாய்ச் சிரித்துக் கொண்டு மதுரத்தினிடம், "வலியெல்லாம் ஓடிப் போய் விட்டதா?" இதோ பார் என்னை! எங்கே சிரி பார்க்கலாம்" என்றெல்லாம் சொல்லிவிட்டு, தங்கமணியுடனும் தமாஷாய்ப் பேசினாள். இந்த அளவுக்கு மீறிய சிரிப்பும், பேச்சுமே அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது.

"இப்பொழுது அவ்வளவாக வலி இல்லை" என்று சொல்லிவிட்டு மதுரம் சமையலறைக்குப் போய் விட்டான். தங்கமணி ஒரு மாதிரியாகத் தன் மனைவியைப் பார்த்து விட்டு மௌனம் சாதித்தான்.

சுசீலாவின் கல கலப்பான பேச்சும் சிரிப்பும் நீடித்திருக்கவில்லை. அப்புறம் அன்று முழுதும் ஒருவருடனும் முகம் கொடுத்துப் பேசாமல் தன்னையே தேன் கொட்டிவிட்டது போல் இருந்தாள் அவள்.

அன்று இரவு அந்தச் சம்பவங்களையெல்லாம் நினைத்துக் கொண்டு மதுரம் பெருமூச் செறிந்தாள். மணி பன்னிரண்டாகிறது. தூக்கம் பிடிக்காமல் மதுரம் கால்களைக் கட்டிக்கொண்டு தன் எண்ணங்களிலேயே லயித்தவளாய் உட்கார்ந்திருந்தாள். "சுசீலா நம்மைப் பற்றி என்ன சந்தேகப் படுகிறாளோ?— நாம் அவளை அக்கா என்று கூப்பிடுகிறோம்; நிஜ அக்காவாக இருந்தால் இப்படியெல்லாம் சந்தேகிப்பாளா?— அவளுக்குச் சந்தேகம் உண்டாகும்படி நான் என்ன பண்ணிவிட்டேன்? ஒன்றும் பண்ணவில்லையே? அவர் எவ்வளவோ நல்லவர் ......"

இப்படி அவள் நினைக்கையில் அறைக்கு வெளியே சத்தம் கேட்டது. அறைக் கதவு மெள்ளத் திறந்து கொண்டது. மங்கின நிலவொளியில் தங்கமணியின் உருவம் வாசற்படியில் வந்து நிற்பதைக் கண்டாள் மதுரம்.

(தொடரும்)



நீச்சல் பந்தயம்

[ராஜி]

ஒரு குளத்திற்கருகில் ஒரு வாத்தும் அதன் குஞ்சுகளும் வசித்து வந்தன. பக்கத்தில் ஒரு கோழியும் அதன் குஞ்சுகளுடன் வசித்து வந்தது.

கோழியும் வாத்தும் அவற்றின் குஞ்சுகளும் ஒன்றுக்கொன்று சிநேகமாக இருந்தன. ஆனால் கோழியின் கடைசிக் குஞ்சும், வாத்தின் கடைசிக் குஞ்சும் ரொம்ப ரொம்ப ரொம்ப சிநேகமாக இருந்தன. விளையாடும் போது கூட அவை சண்டை போட்டுக் கொள்வதில்லை. அவ்வளவு சிநேகிதம்.

ஒரு நாள் வாத்துக் குஞ்சும் கோழிக் குஞ்சும் குளக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தன. அப்பொழுது வாத்துக் குஞ்சின் தாயாராகிய பெரிய வாத்து குளத்தில் நீந்திக் கொண்டிருந்தது. கரையில் கோழிக் குஞ்சுடன் விளையாடிக் கொண்டிருந்த வாத்துக் குஞ்சைத் தன்னருகில் அழைத்தது.

வாத்துக் குஞ்சு "இதோ வருகிறேன்" என்று குளத்தில் இறங்கித் தண்ணீரில் நீந்த ஆரம்பித்தது. கோழிக் குஞ்சும் வாத்துக் குஞ்சைப் போல் தண்ணீரில் இறங்க ஆரம்பித்தது. அதைப் பார்த்த வாத்துக் குஞ்சு, "இந்தா, நீ தண்ணீரில் இறங்காதே. உன்னால் நீந்த முடியாது" என்று சொல்லவே பெரிய வாத்து சிரித்தது. அங்கிருந்த மற்றைய வாத்துக் குஞ்சுகளும் கைகொட்டி சிரித்தன.

அவை சிரித்தது கோழிக் குஞ்சுக்குத் தாங்க முடியவில்லை. தன்னால் நீந்த முடியாது என்று அப்பொழுதுதான் அது தெரிந்து கொண்டது.

அதன் தாயார்க் கோழி "வாத்துகளைப்போல் கோழிகள் நீந்த முடியாது" என்று எவ்வளவோ சொல்லியும் கோழிக்குஞ்சு சமாதானம் அடையவில்லை. தான் எப்படியாவது நீந்தக் கற்றுக்கொண்டு, வாத்துக் குஞ்சுகளுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தது.



அப்படித் தீர்மானம் செய்தது முதல் அந்த கோழிக் குஞ்சு அதிகாலையில் எழுந்திருந்து குளக் கரைக்குப் போவது வழக்கம். அதன் தாயார் "ஜலத்தினருகில் போகாதே. உன்னால் நீந்தக் கற்றுக் கொள்ள முடியாது" என்று சொல்லியும் கோழிக் குஞ்சு கேட்கவில்லை.

இப்படி இருக்கையில் ஒரு நாள் வாத்துக் குஞ்சும் கோழிக் குஞ்சும் வழக்கம்போல விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது கோழிக் குஞ்சு திடீரென்று "சிநேகிதனே! என்னால் நீந்த முடியாது என்று நீயும் உன் தாயாரும் உன் சகோதரிகளும் சொன்னீர்களல்லவா? நாளைக் காலையில் நீயும் நானும் இந்தக் குளத்தில் ஒரு முறை தண்ணீரில் நீந்தி வரலாம். பந்தயம் வருகின்றாயா?" என்று கேட்டது.

இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த வாத்துக் குஞ்சு "சிநேகிதனே! கோபித்துக் கொள்ளாதே. நீ சொல்லியபடி உன்னுடன் நாளைக் காலையில் பந்தயத்திற்கு வருவதற்கு எனக்கு ஆட்சேபமில்லை. ஆனால் உனக்கு ஆபத்து ஏற்படுமே என்று பயப்படுகிறேன்" என்று சொல்லிற்று.




"ஆபத்து ஏற்பட்டால் பாதகமில்லை" என்றது கோழிக் குஞ்சு.

தாயார்க் கோழி பந்தயம் வேண்டாம் என்று சொன்னபோது அதன் குஞ்சு "அம்மா, நீ பயப்படாதே. வாத்துக் குஞ்சை நீச்சலில் ஜயிக்கிறேன், பார்!" என்றது.

மறுநாட் காலையில் குளக்கரையில் ஏகக் கூட்டம். கோழியும் கோழிக் குஞ்சுகளும் வேடிக்கை பார்ப்பதற்கு வந்திருந்தன. குறிப்பிட்ட நேரத்தில் வாத்துக் குஞ்சும் கோழிக் குஞ்சும் பந்தயம் ஆரம்பித்தன. கோழிக் குஞ்சு தண்ணீரில் இறங்கியவுடன் சற்றுத் தத்தளித்தது. பிறகு சமாளித்துக் கொண்டு நீந்த ஆரம்பித்தது. எப்படி நீந்திற்று என்று நினைக்கிறீர்கள்? எல்லோரும் ஆச்சரியப்படும்படி நீந்திற்று. வாத்துக் குஞ்சை விட ரொம்ப ஜோராக நீந்திற்று. வாத்துக் குஞ்சு பாதி தூரம் வருவதற்குள் கோழிக் குஞ்சு புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டது. கோழிக் குஞ்சின் தாயார் சந்தோஷந் தாங்காமல் அதைக் கட்டி அணைத்தது. வாத்தும் வாத்துக் குஞ்சுகளும் ஆச்சரியமடைந்து ஸ்தம்பித்து நின்றன. கோழிக் குஞ்சு பெருமையுடன் வாத்துக் குஞ்சுகளின் எதிரில் சற்று அழுத்தலாக நடந்தது. அது முதல் வாத்துக் குஞ்சுகள் கோழிக் குஞ்சுக்கு நீந்தத் தெரியாது என்று சொல்லுவதில்லை.



ஆனால் கோழிக் குஞ்சு எப்படி நீந்திற்று தெரியுமா? அது குளத்தில் இருந்த ஒரு பெரிய மீனைச் சிநேகம் செய்து கொண்டது. பிறகு பந்தயத்தன்று அதன் மீது ஏறிக்கொண்டு ஜோராகச் சவாரி செய்தது!





சிக்கனம்!

இரவு ஒரு மணிக்கு சினிமா பார்த்து விட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்த ஒருவர் வழியில் ஒரு டாக்டர் வீட்டின் கதவைத் தட்டினார். டாக்டர் வெளியே வந்தார்.

வந்தவர்:—உடனே புறப்பட வேண்டும். ரொம்ப அவசரம்!

டாக்டர் அவசரமாய்த் தமது காரில் வந்தவரை அழைத்துக் கொண்டு கிளம்பினார். வீடு வந்ததும் காரை விட்டிறங்கியவர், "தங்களுக்கு 'விசிட்டிங் பீஸ்' எவ்வளவு?" என்று கேட்டார்.

டாக்டர்:—நாலு ரூபாய்.

வந்தவர்:—இந்தாரும்; எடுத்துக் கொண்டு போங்கள். அந்த டாக்ஸி ட்ரைவர் இங்கு என்னைக் கொண்டு வந்து விடுவதற்கு அநியாயமாய்ப் பத்து ரூபாய் கேட்டான்.

—கே. வி. சீனு

●

நல்ல வேலை!

டாக்டர்:—நான் உம்மை தினம் மூன்று கிளாஸ் தண்ணீர் சாப்பிடும்படி சொன்னேனே, அது மாதிரி செய்து வருகிறீர்களா?

நோயாளி (பால் விற்பவர்):—இல்லை சார்! அதற்கு பதில் நம்ம வீட்டிலேயே மூன்று வேளை பால் சாப்பிடுகிறேன்.

—பி. ஆர். கிருஷ்ணன்.

●

மூன்று கண்கள்

உபாத்தியாயர்:—பரமசிவனுக்கு எத்தனை கண்கள்?

பையன்:—மூன்று ஸார்.

உபாத்தியாயர்:—உனக்கு எப்படித் தெரிந்தது?

பையன்:—பையன்கள் உங்களைப் 'பாதி பரமசிவன்' என்கிறார்கள். அதிலிருந்து பரமசிவனுக்கு மூன்று கண்கள் என்று அறிந்து கொண்டேன், ஸார்!

—கே. ராஜேந்திரன்.

ஆராய்ச்சி

முதல் சரித்திர ஆராய்ச்சியாளர்:—சோழ நாட்டில் முன் காலத்தில் தந்தியை உபயோகித்து வந்தனர் என்பதற்கு அத்தாட்சி எங்கள் கிராமத்திற்குப் பக்கத்தில் சில தந்திக் கம்பிகள் 500 அடி ஆழத்திலிருந்து கிடைத்திருப்பதே போதுமானது.

இரண்டாவது ஆராய்ச்சியாளர்:—பாண்டி நாட்டில் 'வயர்லெஸ்' உபயோகித்ததற்கு அத்தாட்சி 700 அடி தோண்டினாலும் கம்பிகள் கிடைக்கவில்லை என்பதே போதும்.

—டி. தேசிகன்.

●

ஊகம் எப்படி?

முதல் நண்பன்:—இந்த கட்டிடத்தை எங்கள் தாத்தா கட்டினார்.


இரண்டாவது நண்பன்:—அப்போ உங்க தாத்தா கொல்லத்துக்காரரா?

—கே. ரங்கராஜன்.

●

புத்திசாலி!

வந்தவர்:—என்னடா, நிஜமாகவே உன் எஜமான் வீட்டில் இல்லையா?



வேலைக்காரன் (கோபமாக):—நீ என் வார்த்தையை நம்ப வேண்டாம், ஐயா! எஜமானே சொல்ற வார்த்தையைக்கூட நம்ப மாட்டியா?

—என். பத்மநாபன்.

அந்தப்புரப் பேச்சு

"அநஸூயை"

அன்று மத்தியானம் இரண்டு மணி முதற்கொண்டு ராதா தன் சிநேகிதி சீதாவை எதிர் பார்த்திருந்தாள். ஆனால் அவள் நாலு மணிக்குத்தான் வந்தாள். வந்ததும் "ஏன்? இத்தனை நாழி? ஒருவேளை, பாதி வழி வந்து விட்டு அப்புறம் ஞாபக மறதியாக வீட்டுக்கே திரும்பிப் போய்விட்டாயோ, என்னவோ என்று நினைத்தேன்" என்றாள் ராதா.

"இல்லை, இல்லை. பன்னிரண்டு மணிக்கே கிளம்பி விட்டேன். ஆனால் இந்தக் காலத்திலே பஸ்ஸிலே ஏறி வருகிற தென்றால் இலேசில் இருக்கிறதா? இடமே அகப்பட வில்லை. ஓடுகிற வண்டிகளும் குறைச்சல். அதிலும் வண்டியிலிருந்து இறங்குகிறவர்களை இறங்கக்கூட விடாமல் புருஷர்கள் எல்லாரும் திமு திமு என்று ஏறினால் நாம் என்ன பண்ணுகிறது?" என்றாள் சீதா.

"அப்படிக் கஷ்டப்பட்டு வண்டியில் ஏறி கூடும் சில சமயம் நின்று கொண்டிருக்க வேண்டி யிருக்கிறது. ஏதோ ஒருத்தர், இரண்டு பேர் ஸ்திரீகளாயிற்றே என்று தாங்கள் எழுந்திருந்து நமக்கு இடம் கொடுக்கிறார்கள். பாக்கிப் பேருக்குத் தாங்களும் எழுந்து இடம் கொடுக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் எழுந்திருக்க இஷ்டப்படுவதில்லை. அதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு பலத்த யோசனை செய்பவர்கள்போல் இருப்பார்கள். அல்லது எங்கேயோ பார்த்துக் கொண்டிருப்பார்கள்" என்றாள் ராதா.

"இந்த பஸ் தொல்லைக்கு ஒரு வழியும் கிடையாதா?"

"இப்படிக் கஷ்டம் ஏற்படாதிருக்கப் பம்பாயில் சர்க்கார் ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். பஸ் ஸ்டாண்டில் வருகிறவர்கள் வரிசையாய் நின்று கொண்டிருக்க வேண்டியது. அதாவது, முதலில் வந்தவர்கள் முதலில், இரண்டாவது வந்தவர்கள் இரண்டாவது இப்படி. பஸ் வந்ததும் ஒவ்வொருத்தரும் அவர்கள் நின்று கொண்டிருக்கும் வரிசைப்படிதான் ஏற வேண்டியது. சீமையில் எல்லாம் இப்படித்தான் ரொம்ப நாளாய் நடந்து கொண்டிருக்கிறது. இங்கே இப்போ அது மாதிரி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்."

"அது ஒரு நல்ல யோசனைதான். ஆனால் இதிலே பல தொந்தரவு ஏற்படுமே."

"என்ன தொந்தரவு?"

"ஒரு புருஷன், அவர் சம்சாரம், அவர் தாயார் மூன்று பேரும் போகிறார்களென்று வைத்துக்கொள். எல்லாரும் பஸ் ஸ்டாண்டில் வரிசைக் கிரமமாக நிற்கிறார்கள். வண்டியிலே இரண்டே இரண்டு பேருக்குத்தான் இட மிருக்கிறது. அப்பொழுது புருஷன் யாரை அழைத்துக்கொண்டு போவது? சம்சாரத்தை அழைத்துக்கொண்டு போனால் தாயாருக்குக் கோபம் வரும். தாயாரை மட்டும் அழைத்துக்கொண்டு சம்சாரத்தைத் தனியே விட்டுப் போவதற்குத் தைரியம் வருமா?" என்று ராதா கேட்டாள்.

"ஏது, இன்று பெரிய புதிர் போட்டுப் பேசுகிறாயே. அப்படி நேர்ந்தால் சிரமம்தான். அவர்கள் மூன்று பேருக்கும் சேர்ந்தாற்போல் இடம் காலி யிருக்கும் பஸ் வருகிற வரை காத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்."

"சரி! எல்லாரும் பஸ் ஸ்டாண்டிலே வரிசையாக நின்று கொண்டிருக்கிறபோது யாராவது ஒருத்தர் குறுக்கே வந்து முதலில் ஏறினால் என்ன பண்ணுகிறது?"

"ஏறினால் நூறு ரூபாய் அபராதம் போடுவார்களாம். என் பம்பாயிலே ஒரு



காலேஜ் பையன் அப்படித்தான் ஏறப்போனானும். அதற்காக அவன் கையிலே அங்கேயே விலங்கை மாட்டிப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனார்களாம்."

"நிஜமாகவா!"

"பத்திரிகையிலே போட்டிருக்கிறதைத் தானே சொல்கிறேன். இப்படிக் கடுமையாக நடந்து கொண்டால் அப்புறம் இது மாதிரி சட்டமே வேண்டாம் என்று தோன்றுகிறது."

● "ஆமாம். என் ராதா, ஸ்டாண்டர்ட் துணியைப் பற்றிச் சொல்கிறேன் என்றாயே? அப்புறம் அதைப் பற்றி ஒன்றுமே வாயைத் திறக்கவில்லையே."

"அது சாதாரண வெள்ளைத் துணிதானாம். கொஞ்சம் மோட்டாவாக இருக்குமாம். ஏழைகளுக்குக் குறைந்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்யப் போகிறார்களாம்."

"குறைந்த விலைக்குக் கொடுக்கிறதென்றால், துணி அகலக் கட்டையாய் முழங்கால் வரைக் கட்டிக் கொள்ளும்படியாய் இருக்குமோ?"

"இல்லை, இல்லை. வேண்டிய அகலம் இருக்கும்."

"ஏழைகளுக்காக என்றாயே? ஏழைகளென்றால் யார்?"

"தெரியாதா? சொற்ப சம்பாத்தியம் உள்ளவர்கள்தான்."

"இந்தக் காலத்திலே சாமான்கள் விற்கிற விலையைப் பார்க்கிறபோது மாதம் நூறு ரூபாய் கிடைத்தால் கூடச் சொற்ப சம்பாத்தியம் என்றுதானே சொல்ல வேண்டும்."

"வாஸ்தவம்."

"இந்த ஸ்டாண்டர்ட் துணியைப் புருஷர்கள் மட்டுந்தானே கட்டிக்கொள்ள முடியும்?"

"ஆமாம்!"

"இப்பொழுது அவர்களுக்கு என்ன அவசரம் வந்து விட்டது? அவர்களுக்கு நாலு முழத்திலே ஒரு வேஷ்டி கட்டிக்கொண்டால் ஆயிற்று. ஸ்திரீகளுக்கல்லவா பன்னிரண்டு முழம் முதல் பதினெட்டு முழம் வரையில் வேண்டியிருக்கிறது? ஆகையினாலே முதல் முதலிலே குறைந்த விலையில் புடவைகள் விற்கவல்லவா ஏற்பாடு செய்ய வேண்டும்?"

"நான் வைஸ்ராயாயிருந்தால் அப்படித்தான் செய்திருப்பேன். அதோடு கூடப் பதினெட்டு முழம் புடவை கட்டிக் கொள்ளவே கூடாதென்று உத்தரவு போட்டிருப்பேன்" என்றான் ராதா.

கேட்டுப் பாருங்கள்!

11உ. திருச்சியில் ஸ்ரீ எஸ். கே. வெங்கடராமன் காலை 8-30க்கும் மத்தியானம் 1-40க்கும் பாடுகிறார்: பெரிய கச்சேரியாக வர வேண்டிய பாட்டு. இரவு திருப்பாம்பரம் சகோதரர்கள் நாதஸ்வரத்தில் முத்துத் தாண்டவர் பாடல்களைப் பொழிகிறார்கள்.

12உ. சென்னையில் வெகு நாளைக்குப் பின்பு ஸ்ரீமதி ராஜம் புஷ்பவனம் கச்சேரி செய்கிறார்.

13உ. திருச்சியில் மன்னார்குடி சாவித்திரி அம்மாளின் கோட் வாத்தியக் கச்சேரி.

14உ. சென்னையில் 5-30க்கு மருத்துவக்குடி கோபு பாடுகிறார். வித்வத் ததும்பும் பாட்டு.

திருச்சியில் இரவு கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை.

15உ. சென்னையில் ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள். அன்று திருச்சியில் காலை 8-30க்கும் மாலை 6 மணிக்கும் ஸ்ரீமதி வேதவல்லி



சீனிவாசனின் பாட்டைக் கேட்டுப் பாருங்கள் என்று ஒரு ரஸிகர் சிபார்சு செய்கிறார்.

16உ. சென்னையில் ஸ்ரீ தண்டபாணி தேசிகர் வாத்திய கோஷ்டியுடன் பாடுகிறார். திருச்சியில் ஸ்ரீ கே. விஜயராகவனு என்னும் இளம் சங்கீத பூஷணத்தின் பாட்டையும் கேட்டுப் பார்க்கலாம்.

17உ. சென்னையில் ஸ்ரீ ஏ. நாராயணய்யர் கோட் வாசிக்கிறார். திருச்சியில் மகாராஜபுரம் விசுவநாதய்யர்.

18உ. திருச்சியில் ஸ்ரீ என். எஸ். ராஜண்ணு பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரி.

19உ. சென்னையில் பாகவதர் பாட்டு.

20உ. திருச்சியில் திருவையாறு டி. வைத்தியநாதய்யர் பெரிய கச்சேரி செய்கிறார்.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் "அவசரம்!" என்னும் தலைப்புடன் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: கே. ராமலிங்கம், திருவல்லிக்கேணி, சென்னை.

சுறு சுறுப்பு

[வி. எஸ். ஆர்.]

[ரங்கராஜன் அடுப்பங்கரைக்குள் நுழைந்து பிரவேசம் செய்கிறான்.]

ரங்கராஜன் :—உம்! உம்! ஆகட்டும் சீக்கிரம்! மணி எட்டரைக்கு முகூர்த்தம். இப்பொழுதே எட்டு ஆகிவிட்டது.

செல்லம் :—அழகா யிருக்கு! இன்னும் நீங்கள் குளிக்கக்கூட இல்லை. என்னை வந்து அவசரப்படுத்துகிறீர்களே!

ரங்க :—இதோ. நான் இரண்டே நிமிஷத்தில் ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேனா, இல்லையா பார்!

[குளிக்கும் அறையிலிருந்து 'டங்' 'டங்' என்று சத்தம் கேட்கிறது.]

செல் :—ஏன்னா! உள்ளே என்ன சத்தம்?

ரங்க :—தண்ணீர் வரமாட்டேனென்கிறது. அதற்காகப் பம்பை ஒரு கூழாங் கல்லால் தட்டிக் கொண்டிருக்கிறேன். நம்ம அவசரம் கார்ப்பொரேஷன் குழாய்க்குத் தெரிகிறதா? சனியன் சொட்டு சொட்டாகத்தான் ஜலம் வருகிறது.

[ரங்கராஜன் குளித்து விட்டு வருகிறான்.]

ரங்க :—ஆமாம்; 'டிரஸ்' பண்ணிக் கொள்ளாமல் குழந்தை தவழ்ந்து விளையாடுகிற மாதிரி அங்கே என்ன செய்கிறாய்?

செல் :—ஒன்றுமில்லை; பெட்டிச்சாவி கீழே விழுந்திருக்குமோ என்று தேடிக் கொண்டிருக்கிறேன்.

ரங்க :—பேஷ்! சாவியைத் தொலைச்சாச்சா? மணி எட்டேகால் ஆகிவிட்டது. இனிமேல் முகூர்த்தத்துக்குப் போனால் போலத்தான்.

செல் :—பேஷாகப் போகலாம். இன்னும் நாழி யிருக்கிறது! ஒரு நிமிஷம் இப்படி வாருங்கள்! தோசை திருப்பியைப் போட்டு இந்தப் பெட்டியைத் திறந்து கொடுங்கள்.

[ரங்கராஜன் பல்லைக் கடித்துக் கொண்டு பெட்டியை நெம்புகிறான்.]

ரங்க :—அட ஈச்வரா! நான் இவ்வளவு சிரமப்பட்டு என் பெட்டியை அல்லவா திறந்திருக்கிறேன்!

செல் :—ஆமாம்; ஆமாம்; இரண்டு பேருக்கும் ஒரே மாதிரிப் பெட்டியாயிருப்பதால் உங்கள் பெட்டிக்கும் என் பெட்டிக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

ரங்க :—அடையாளம் தெரிவதற்காக உன் பெட்டியைக் கொஞ்சம் நகக்கிவை என்று சொன்னேனே. '...சரி, சரி! உன் பெட்டியை எடுத்துக் கொண்டுவா. இப்பொழுதாவது நசுக்கி வைக்கிறேன்.

செல் :—வேண்டாம், வேண்டாம்! அட, என் நீலப் பட்டுப் புடவை அதோ கொடியிலேயே இருக்கிறதே! அது தெரியாமல் பெட்டியை உடைத்துக் கொண்டு......

ரங்க :—ரொம்ப சமர்த்துதான் போ!

செல் :—ஆமாம்; நான் அசடுதான்...

[செல்லம் உள்ளே போகிறாள்.]

ரங்க :—என்ன, 'டிரஸ்' பண்ணிக் கொண்டாகிவிட்டதா? இன்னும் பத்து நிமிஷம்தான் பாக்கி யிருக்கிறது!

செல் :—இதோ வந்துவிட்டேன்.

ரங் :—எதோ? வெளியில் வரப் போகிறாயா, இல்லையா?

செல் :—(மௌனம்)



டாக்டர் :—ஐயா, நீர் கொடுத்த செக் திரும்பி வந்து விட்டது. இதற்கு என்ன சொல்கிறீர்?

நோயாளி :—என் வயிற்று வலியும் திரும்பி வந்துவிட்டது. அதற்கு என்ன சொல்கிறீர்?

ரங் :—செல்லம் ! ! !

செல் :—அப்பப்பா, வருகிறதற்குள்ளே என்ன அவசரம் ?

[வெளியில் வருகிறான்.]

வாருங்கள், போகலாம் !

ரங் :—இங்கே இப்படிக் கொஞ்சம் வந்து, இந்தக் கழுத்துப் பொத்தானைப் போட்டுவிடு !

செல் :—அட, ராமா ! நாழியாகி விட்டதென்று என்னைப் பாடாய்ப் படுத்தினீர்களே, இத்தனை நாழி வெறுமனே தானே இருந்தீர்கள் ? நீங்களே போட்டுக் கொண்டிருக்கக் கூடாதா ?

ரங் :—பெட்டியைத் திறந்ததில் விரலெல்லாம் ரணமாய்ப் போய்விட்டது. பொத்தானைத் தொட முடியவே இல்லை.

செல் :—சரி, இதோ போட்டு விடுகிறேன்.

செல் :—நாழியாகி விட்டது, வாருங்கள் !

ரங் :—முகூர்த்தப் பத்திரிகையை மறக்காமல் எடுத்துக் கொண்டாயா ?

செல் :—ஒண்ணு ஒண்ணாக ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்கிறேளே !

ரங் :—பத்திரிகை யிருந்தால்தானே கல்யாணம் நடக்கிற வீட்டுக்குப் போக முடியும்.

செல் ;—அது என்னிடம் இல்லையே !

ரங் :—என்ன ? நான்தானே உன்னிடம் கொடுத்தேன் ?

செல் :—இல்லவே, இல்லை.

ரங் :—ஈச்வரா ! கல்யாணம் எங்கே நடக்கிறதென்று தெரியாமல் எப்படிப் போகிறது ? இப்பொழுதே மணி எட்டரை ஆகிவிட்ட... நான் போகா விட்டால் என் சி... கோபித்துக் கொள்வானே !

செல் :—இப்பொழுது ஒரு டாக்ஸியில் புறப்பட்டாலும் போய்விடலாம். ராமப்ப நாயக்கன் தெருவில் ஒரு சத்திரத்தில்தான் கல்யாணம் என்று போட்டிருந்தது. வாருங்கள், விசாரித்துக் கொண்டு போகலாம்.

ரங் :—உம் ! சரி, புறப்படு !

செல் :—இதோ ! நல்ல வேளை ! முகூர்த்தப் பத்திரிகை இதோ அகப்பட்டு விட்டது !

ரங் :—எங்கே, விலாசத்தைப் பார்.

செல் :—" ......1005, ராமப்ப நாயக்கன் தெருவில் நடைபெறுவதால் தாங்கள் இஷ்ட மித்திர ...... "

ரங் :—போதும், போதும் ! அதை முழுக்கப் படிக்க வேண்டாம். வா, வா !

செல் :—ஐயய்யோ ! ஏன்னா !

ரங் :—என்ன, ' ஏன்னா ?'

செல் :—முகூர்த்தம் ?


ரங் :—ஆமாம் ; முகூர்த்தம்.

செல் :—முகூர்த்தம் 24வ வெள்ளிக்கிழமை. அதாவது, இன்றைக்கு எட்டாவது நாள்.

ரங் :—கல்யாணம் அடுத்த வெள்ளிக்கிழமையா ! அதனால் பரவாயில்லை. இப்பொழுதே நீ 'டிரஸ்' செய்து கொள்ள ஆரம்பித்தால் கல்யாணத்துக்குப் போகச் சரியாயிருக்கும் !

[திரை]

• • •



சிறந்ததை விரும்பும்
அந்தச் சிலருக்கு மட்டும்

நறுமணம் கமழும் சிகரெட்டை விரும்புவோர் டிலக்ஸ் டெனாரை வரவேற்பார்கள். 'உலகில் சுகத்தின் எல்லை இதுவே' என்று இதன் நறுமணம் கருதப்படுகிறது. உத்தரவாதமுள்ள 100% பொருக்கின வர்ஜீனியா புகையிலையென்றால் அது சாதாரண உத்தரவாதமல்ல.

பெரிய அல்லது ஸ்டாண்டர்டு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்.

BY APPOINTMENT TO THE MOST HONOURABLE THE MARQUESS OF LINLITHGOW, VICEROY AND GOVERNOR GENERAL OF INDIA

TENOR
de luxe CIGARETTES

Guaranteed 100% Pure Virginia Tobacco

உங்களது உத்தரவாதம்

டி லக்ஸ் டெனார் சிகரெட்ஸ்

ஜேம்ஸ் கார்ல்டன் லிட்., லண்டன்

EASTERN LICENCEES — P. B. NO 9029 — CALCUTTA.

T-8 ACI

Regd. No. M. 4392



Edited, Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press,
[illegible] Sladen [illegible], Poonamallee High Ro[illegible] Madras